


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே – 2018

மலர் - 50 இதழ் - 04

## ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

## இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

## துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

## கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

## வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

## முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

## பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


# உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
மே மாதம் மேரி மாதம் ........ 02
கவிதைகள் ........ 03
வாய்மையே வெல்லும் ........ 05
இலக்கிய மஞ்சரி ........ 07
ஸ்ரீதேவியே சினிமா ........ 08
நல்லொழுக்கம் ........ 10
வினா விடைப் போட்டி ........ 11
சின்ன விசயங்கள் சிறந்த ........ 12
நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் ........ 12
அன்னை மரியே வாழ்க ........ 13
மருத்துவம் ........ 14
கத்தோலிக்கத் திருஅவையின் ........ 16
இதுதான்டா அரசியல் ........ 18
மாணவர் பக்கம் ........ 20
உலகெங்கும் மரியாள் ........ 21
எண்ணிப்பார்க்கையில் ........ 21
ஏழைக்குத் துணை நீயே ........ 22
எங்கள் தமிழ்த் தாய் ........ 23
கடுகுக் கதை ........ 24
புனிதர்களை அறிவோம் ........ 25
கத்தோலிக்க திருமறை ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....



- கேட்கின்ற வரங்களை எல்லாம்
  பெற்றுக் கொடுப்பவள் - அன்னை மரியாள்
- கவலைப்படுகின்ற போது முன்வந்து
  கண்ணீரைத் துடைப்பவள் - அன்னை மரியாள்
- வேதனையால் வாடுகின்ற போது
  அருகில் வந்து ஆறுதல் அளிப்பவள் - அன்னை மரியாள்
- எதிர்காலத்தைப் பற்றிய பயத்தினால் மூழ்கிக் கிடக்கிறபோது
  வழிகாட்டுபவள் - அன்னை மரியாள்

அன்புமிக்க சகோதரங்களே!

இப்படி எம் அன்னை மரியாளைப் பற்றியும் அவள் எனக்கும் என் குடும்பத்திற்கும் செய்து வருகின்ற நன்மைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். எங்களில் யாருமே சொல்ல முடியாது அன்னை மரியாள் எனக்கு ஒரு நன்மையும் செய்ததே இல்லை என்று. காரணம் கோடிக்கணக்கான பக்தர்களைத் தன்வசம் ஈர்த்துக்கொண்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கவலையைப் போக்கி - கண்ணீரைத் துடைத்து - நோய்களைக் குணப்படுத்தி - பிள்ளைப் பாக்கியங்களைக் கொடுத்து - தொழில் வாய்ப்புக்களைப் பெற்று மகிழும் அளவுக்கு ஆசீரைக் கொடுப்பவள்தான் "அருள் நிறைந்த அன்னை மரியாள்".

"அருள் நிறைந்தவளே வாழ்க...." என்று கடவுளின் குரலைக் கேட்டு அவரிடமிருந்து நிறையவே அருளைப் பெற்றவள்தான் நானும் நீங்களும் நம்புகின்ற அன்புத் தாய் மரியாள். கடவுளின் அருளைத் தன்னோடு வைத்திருக்கின்ற அந்த அன்னையைத் திருச்செபமாலையில் "அருள் நிறைந்தவளே வாழ்க" என்று பெயர் சொல்லி நாம் அழைக்கின்றபோது, அவளும் எங்களுடைய செபம் கேட்டு எங்களுக்குக் கைமாறு கொடுக்கக் காத்திருக்கின்றாள்.

துன்பப்படுகின்றவர்களின் கண்ணீரைத் துடைப்பவள் அன்னை மரியாள். காரணம் அவளுடைய பிறப்பே துன்பப்பட்டு, வேதனையோடும், அவமானத்தோடும், பிள்ளைகள் இல்லையே என்ற புறக்கணிப்பால் ஒதுக்கப்பட்டுக் கடவுளையே நம்பி வாழ்ந்த மரியாளின் பெற்றோரான 'சுவக்கீன் - அன்னம்மாள் என்கின்ற இருவருடைய கண்ணீரையும் துடைத்தவள், அவமானத்தைப் போக்கியவள், வேதனையைப் போக்கியவள், வேதனையை விலகச்செய்து அவர்களைத் தலைநிமிரச் செய்தவள் அன்னை மரியாள்.

அன்று எப்படி அன்னை தன் பிறப்பாள் கண்ணீரைத் துடைத்து, துயரத்தைப் போக்கினாளோ இன்றும் நாம் வேதனைகளை, துன்பங்களை, கலக்கங்களை, அவமானத்தை அனுபவிக்கிறபோது நம்பிக்கையோடு எம் இரண்டு கைகளையும் அன்னையின் பாதத்தில் வைத்து, பாரங்களையெல்லாம் அவளிடம் ஒப்படைப்போம். கருணை கூர்ந்து இரக்கம் காட்டுவாள் என் தாய் அன்னை மரியாள்.

அன்னை மரியாளுக்குச் சிறப்பான வணக்கத்தைக் கொடுக்க இந்த மாதம் எமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்னையின் பக்தர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற இக்காலத்தில் நானும் என் குடும்பமும் அன்னையை ஏற்றுக் கொண்டு அவளுக்கென்று எம் குடும்பத்தில் ஒரு இடத்தைக் கொடுப்போம். அப்படி கொடுக்கிறபோது உங்கள் முழுக் குடும்பமும் அன்னையின் ஆசீரால் நிரப்பப்படுவதைக் காண்பீர்கள்.

"அருள் நிறைந்தவளே வாழ்க" என்கின்ற செபத்தின் சத்தம் உன்னுடைய குடும்பங்களில் கேட்கிறபோது, அன்னையின் ஆசீர் உங்களை வழிநடத்தி, துயர் துடைத்து, நோய் நொடிகளைக் குணப்படுத்தி, அமைதியும், சந்தோசமும் குடும்பத்தில் நிறைவதை உங்கள் கண்கள் கண்டு கொள்ளும்.

புதுமைகள் புரியும் புல்லுமலை புனித செபமாலை அன்னையே என்று சொல்வதைக் கேட்கிறபோது, தங்களை அறியாமலே கண் கலங்குகிற அன்னையின் ஆசீர்வாதம் பெற்ற அடியவர்களைப் பார்க்கின்றோம். எங்களைக் கைவிடாத ஆயித்தியமலை சகாயத் தாயே என்று சொல்லுகிறபோது முழந்தாள் படியிட்டு அழுகின்ற பக்தர்களை ஒவ்வொரு வருடமும் நாம் பார்க்கின்றோம். இப்படி நம்பி வருகின்றவர்களைக் கைவிடாது கரம் பிடித்து, துயர் துடைக்கின்ற எம் அன்னையிடம்,

எமது கவலையை
எமது துன்பத்தை
எமது தொழிலை
எமது உறவுகளை
எமது பயணத்தை
எமது குடும்பத்தை
எமது எதிர்காலத்தை
ஒப்புக்கொடுப்போம்.

நம்பிக்கையோடு அன்னையின் பாதத்தைப் பிடித்து ஒப்புக்கொடுத்துப் பாருங்கள். இரட்டிப்பான ஆசீர்வாதங்களை உங்களின் இரண்டு கரங்கள் நிரப்பும்படியாய் அன்னை பெற்றுக்கொடுப்பாள். வழிநடத்திக் காப்பாள்.

- உம்மைத் தேடி வந்தேன் சுமை
தீருமம்மா
உலகாளும் தாயே அருள்தாரும் அம்மா

- அதிபர் -

இறைவாக்கு

**"அருள்மிகப் பெற்றவரே வாழ்க**
**ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்"**
லூக்கா 1:28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாதம் மேரி மாதம்!

பேரருட்தந்தை. ஜோசப் பொன்னையா ஆண்டகை
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

மே மாதத்தை 'மேரி மாதம்', 'மாதா வணக்க மாதம்' என்கிறோமே அதன் முக்கியத்துவம் என்ன? வரலாறு என்ன?

ஆண்டின் முதல் நாளை 'இறைவனின் தாய் மரியா' (லூக் 1:43) என்று கொண்டாடி மகிழும் தாய்த் திருச்சபை, மே மாதத்தையும், அக்டோபர் மாதத்தையும் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதங்களாக அறிவித்து, "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்றும், "எல்லாத் தலைமுறையினராலும் பேறு பெற்றவர்" (லூக் 1:48) என்றும் அன்னை மரியாவைப் புகழ்ந்து, வணக்க மாதப் பாடல்கள் பாடிக் கொண்டாடி மகிழ அழைக்கிறது.

மே மாதத்தை மரியா வணக்க மாதமாகக் கொண்டாடும் வழக்கம் திருச்சபையில் 19ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது என்றாலும், மரியா பக்தி திருச்சபையுடன் தோன்றிய ஒன்றாகும். வருடத்தில் வரும் 12 மாதங்களில் ஏப்ரல் தவிர்த்து மற்றெல்லா மாதங்களும் மரியன்னையின் விழாவுள்ள மாதங்களே. தூய ஆவியானவர் எலிசபெத்து வழியாக "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்" (லூக் 1:42) என்ற புகழ்ச்சிக்குரிய வாக்கு மனிதவுருவாகி மனிதராகத் தம்மைக் கையளித்த மரியா நம் அனைவரின் நம்பிக்கைக்குரியவர்.

புனித பொனவந்தூர், "கடவுள் நாம் காணும் இவ்வுலகை விடப் பல மடங்கு மேலான உலகைப் படைக்க முடியும். மேலான மோட்சத்தையும் உருவாக்க முடியும். ஆனால், நம் தேவதாய் மரியாவை விட மேலான ஒரு தாயைப் படைப்பது அவரால் கூட இயலாதது" என்கிறார். தன் புகழை எழுத்தால், பாட்டால், ஓவியத்தால் முழுமையாக வெளிப்படுத்த இயலாத அளவுக்கு விஞ்சி நிற்பவர் மரியாள். ஏனெனில், மரியாவின் புகழ் எழுத்துக்கும், இலக்கியத்துக்கும், கவிதைக்கும், காவியத்துக்கும் அப்பாற்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் மரியாவை, "அன்னை மரியா, திருச்சபையின் தாயும் மாதிரியும்" என்கிறது.

இயேசு இவ்வுலகில் ஊனுடலுடன் உயிர் வாழ்ந்த காலத்திலேயே அவரது போதனைகளையும், புதுமைகளையும் கண்ட ஒரு பெண் "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்!" (லூக் 11:27) என்று கூறி, நிறைவேற்றியதையும் விவிலியம் விளக்குகிறது. அதுபோல, திருச்சபையின் தொடக்க காலம் முதல் மரியன்னை பக்தியும், மரியா பற்றிய சிந்தனைகளும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதங்களுமே இயேசு பற்றிய பல மறையுண்மைகள் வெளிவரக் காரணமாக இருந்துள்ளன. ஒரு தாயின் அன்பை முழுமையாக எடுத்துரைக்க உலக மொழிகளிலெல்லாம் தேடினாலும் போதிய வார்த்தைகள் கிடைக்காதபோது, உருவிலாக் கடவுளுக்கே உருக்கொடுத்த மரியாவை நம்மால் முழுமையாகப் புகழ்ந்துவிட முடியுமா? இல்லை.... நம் மரியன்னையைப் புகழாது இருப்பதுதான் மனிதப் பிறவிக்கு அழகா....? இதனாலோ என்னவோ புனித அகுஸ்தினார், "ஒரு மனிதனின் உடலில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் நாக்குகளாக மாறினாலும் மரியாவை அவரது தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது" என்கிறார்.

மரியா வழியாக இறைவனைப் புகழ்வதே 'மாதா' மாதத்தின் அடிப்படை இலக்காகும். இம்மாதத்தின் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் செபமாலை சொல்லி அந்தந்த நாளுக்கான அன்னையைப் பற்றிய செய்திகளும், புதுமைகளும் வாசிக்கப்பட்டு சில இடங்களில் நற்கருணை ஆசீருடன் முடிவடையும். பெரும்பாலும் செபமாலை, பிரார்த்தனை வணக்க மாத நவநாள், மாதா பிரார்த்தனை, மாதா தேர், ஊர்வலம், மரின்னைப் பாடல்கள் பாடி ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

அன்னை மரியாவின் வாழ்க்கைப் பாதையை முன்வைத்து, அவர் வாழ்ந்து காட்டியதை முன்னிறுத்தி, அவரின் குணநலன்களைக் காரணப்படுத்தி, அவரது மகிமைகளை வரிசைப் படுத்தி, அவர் மக்களுக்குக் காட்டிய காட்சிகளை அடிப்படையாக வைத்து அவரை ஆரோக்கிய மாதா, அடைக்கல மாதா, சகாய மாதா, வியாகுல மாதா, காணிக்கை மாதா, லூர்த்து மாதா, பாத்திமா மாதா என்று பல பெயர்களில் உருவகப்படுத்தி வழிபட்டு வருகிறோம்.

திருச்சபை கடந்த 2018 ஆண்டுகளாக இறைவனின் தாய்! நம் தாய் மரியாவுக்கு அளித்து வரும் வணக்கத்தையும், வணக்க மாதத்தின் பலன்களையும் சீர்தூக்கிப் பார்ப்பது காலத்தின் கட்டாயமாகும்.

முற்காலத்தில் வணக்க மாதத்தை ஒவ்வொரு கிராமத்திலும் வெகு விமரிசையாக, ஆனால் எளிய முறையில் கொண்டாடிய வரலாறுகள் உண்டு. பொருளாதார வசதியில்லாத, மின் வசதியில்லாத அந்தக் காலத்திலேயே அன்னை மரியாவை மகிமைப்படுத்திய விதம் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வளர்ச்சியைக் காட்சிப்படுத்தியது.

தற்காலத்தில் வணக்க மாதத்தைக் கொண்டாட ஆலயத்திற்குச் சென்று மாதாவை வழிபட மக்களுக்கு ஏனோ மனம் வரவில்லை. ஆலயத்துக்குச் செல்வதை வேப்பங்காயாக நினைக்கின்றனர் இன்றைய தலைமுறையினர். ஏனென்றால் மக்களை ஆட்டிப்படைக்கும் தொலைக்காட்சிகளும், பெற்றோர்களின் பக்தியின்மையும், டியூஷன் வகுப்புக்களும், மதத் தலைவர்களின் மந்த நிலைப் போக்கும், ஆலயத்தில் உபதேசியார் மட்டுமே மணியடித்து செபம் சொல்லும் அளவிற்குத் தள்ளப்பட்டுள்ளது கிறிஸ்தவம்.

கிராமத்திலுள்ள நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களில் பத்து, பதினைந்து நபர்களே ஆலயத்திற்குச் செல்கிறார்கள். இந்தப் பத்து பதினைந்து பேர்களும் யாரென்று கேட்டால், எழுபது வயதைக் கடந்தவர்களாக இருக்கிறார்கள். சிறுவர்களையோ, மாணவர்களையோ, இளைஞர்களையோ ஆலயத்தில் காண்பது குதிரைக் கொம்பாக உள்ளது.

தினமும் வணக்க மாதத்தைப் பக்தியாகக் கொண்டாட மனமில்லாமல் இறுதி நாள் திருவிழாவை மட்டும் தாராளமாகப் பணத்தைச் செலவு செய்து ஆடம்பரமாய் கிறிஸ்தவ விழுமியங்களுக்கும் புறம்பாகக் கொண்டாடுகின்றனர். இவ்விதமாக அர்த்தமுள்ள விழாவாக, பக்தியுள்ள விழாவாகக் கொண்டாடத் தவறுகின்றனர். திருவிழாவில் ஆயிரம் உறவினர்களுக்கு உணவளிக்கிறோம் ஆனால், ஒரு ஏழைக்கு உணவளிக்கிறோமா?

நம் அன்னை மரியா தாழ்ச்சியின் பிறப்பிடம், ஏழ்மையின் இருப்பிடம்! தனது மகன் இயேசுவின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து பயணித்தவர். நமது பாவங்களுக்காய் தன் ஒரே மகனையே பலி கொடுத்தவர். மகனின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்தவர். தன்னுடைய பரிந்துரையால்

25 ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது ஜனனம்

மலரொன்று மண்மீது
முகிழ்த்ததென்று
மனையைச் சுற்றியொரு
பெருங்கூட்டம் ....
கையில் போனோடு பிறந்த
கைக்குழந்தை
வரவு பார்க்க!



## காரணிகள்

நாள்தோறும்
வீதி விபத்துக்கள்
பெருகிடக் காரணம் -
அகன்ற சாலைகளும்
பாதுகாப்பற்ற
ரயில் கடவைகளும்
கைத்தொலைபேசிக்
கலாச்சாரமுமேயாம்!



## கட்டாய சேவை

சின்னஞ் சிறிசு முதல்
தள்ளாடும் முதுமை வரை
கைப்பேசியின்றி
நடமாட்டமில்லை....
அஃதில்லாத கரமெல்லாம்
பாழடைந்த
வெற்றுக் கைகளே!



## வீதி விளக்கு

தொழில் திணைக்களத்தின்
ஸாப்புச் சட்டமும்
(shop & Office act)
ஞாயிறு தினத்திலும்
விலக்கில்லாமல் கூடிவரும்
பார்மசிகளைப் போலவே
போன் சொப்புகளுக்கும்!



## போதை தரும் பொக்கிஷங்கள்

பாலியல் வன்முறைகள்
கட்டவிழ்ந்து விரிவுபெற
காரணங்கள் பற்பல ....
போதைவஸ்து பாவினையும்
வர்த்தக சினிமாக்களும்
கட்டிப்போட்டு சீரழிக்கும்
மெகா தொடர்களும்
பெற்றோர் கவனயீனமும்
எனின் மிகையாமோ?

## பின்னடைவு

புத்தகக் கடைகள்
எண்ணிக்கையில் குறைந்தாலும்
ரியூசன் சென்ரர்கள்
மிகுந்தேயிருந்தாலும்
கல்வியில் சமுகம் பின்னடைய
காரணமென்னவோ
போன்சொப்களின் பெருக்கம்தான்!





■ விக்கேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




கதிரவன் தனது இல்லத்திற்குச் செல்லும் வேளையில், தெய்வேந்திரன் ஆசிரியரின் ரியூசன் வகுப்பு முடிந்ததும் மாணவர் குழாம் வெளியேறி ஒருவரையொருவர் முட்டி மோதி முண்டியடித்துக்கொண்டு தத்தமது துவிச்சக்கர வண்டிகளை எடுத்துக்கொண்டு தங்கள் நண்பர்களுடன் செல்ல ஆரம்பித்தனர். அவ்வேளை சுசியும், அவளது தோழி பிறேமியும் மிக வேகமாக வீடு நோக்கி நகர்ந்து கொண்டு அன்றைய நாளில் நடந்த சுவாரசியமான விடயங்களைப் பகிர்ந்துகொண்டு வந்தனர். அந்நேரத்தில் அவர்களுக்கு முன்னே துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த அரவிந்தனை அவனுக்கு எதிரே மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் எதிர்பாராத விதமாக இடித்துச் சென்றது.

உடனே அரவிந்தன் கீழே விழுந்து இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக்கொண்டிருந் தான். அவன் பின்னே வந்துகொண்டிருந்த சுசியும், அவளது நண்பி பிறேமியும் செய்வதறியாது திகைத்துக்கொண்டிருந்தனர். அவ்வேளை அவ்வழியாக சென்ற முச்சக்கர வண்டி ஒன்றினை மறித்து நடந்தவற்றைக் கூறி வண்டியில் ஏற்றிப் பணத்தினையும் கொடுத்து வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு போகுமாறு சாரதியிடம் கூறினார்கள். சுசியும், அவளது நண்பியும் அரவிந்தனை இதற்கு முதல் அறிந்ததே இல்லை. மனிதாபிமான ரீதியில் அவனுக்கு அவர்கள் பிரதிபலன் பாராது உதவி செய்தார்கள்.

சாரதி அரவிந்தனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அவனது குடும்பத்தினரும் தகவலறிந்து பதற்றத்துடன் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தனர். அரவிந்தனைப் பரிசோதித்துப் பாரத்துவிட்டு, அவனுக்கு வலது கால் உடைந்து போய்விட்டது, அவனால் நடக்க முடியாது என வைத்தியர் கூறினார். அரவிந்தனது குடும்பத்தினருக்குத் தலையில் இடி விழுந்தாற்போல் இருந்தது. மிகுந்த கவலையடைந்தனர். அரவிந்தனது குடும்பம் மிகவும் வறிய குடும்பம். அவனது அப்பாவின் கூலி வேலையால் கிடைக்கும் சம்பளத்திலேயே குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த றூபனைக் கைது செய்தனர். வழக்கு நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இதனை அரவிந்தனது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தினர். இவர்கள் வறுமையில் வாடியதால் இவர்கள் பக்கம் வழக்காடுவதற்காகச் சட்டத்தரணி ஒருவரை முன்னாயத்தம் செய்யமுடியவில்லை. இருப்பினும், அரவிந்தனது உயிர்த்தோழன் அனைத்து ஆயத்தங்களையும் முன்னின்று செயற்படுத்தினான். றூபன் வசதி படைத்தவன் என்பதனால் அதிக பணம் செலவழித்துப் பிரசித்தி பெற்ற சட்டத்தரணி ஒருவரை ஆயத்தம் செய்தான். றூபன் பணத்தினால் எதையும் செய்யலாம் என்ற ஆணவம் கொண்டவன்.

வழக்கு நாளன்றும் வந்தது. சுசிக்கும் அவளது நண்பிக்கும் இது அவர்கள் நண்பர்கள் மூலமாகத் தெரியவந்தது. இருவரும் நீதிமன்றுக்குச் செல்ல முடிவுசெய்தனர். நீதிமன்றத்தில் வழக்கு றூபனுக்குச் சாதகமாகவே சென்றுகொண்டிருந்தது. பிறேமி கொஞ்சம் தைரியமானவளும் நீதிக்காக முன்னிற்கக் கூடியவளும். உண்மையின் பாதையில் செல்பவள். வழக்கு இவ்வாறு அநியாயத்தின் பக்கமாகச் செல்வதைக் கண்டு எழுந்து நின்று நீதிபதியிடம், "ஐயா! எனக்கு இங்கே பேச அனுமதி தாருங்கள்" எனக் கேட்டாள். நீதிபதியும் சொல்லவேண்டியதை முன்னால் வந்து சொல்லுமாறு உத்தரவிட்டார் அவள் முன்னே சென்று, "ஐயா! என்னுடைய பெற்றோர் சிறுவயதில் இருந்தே உண்மை பேசி வாழவேண்டும் என்றே மிக ஆழமாகக் கற்றுத்தந்தார்கள். அன்று நடந்த விபத்தை நானும், எனது தோழியுமே கண்களால் கண்ட சாட்சிகள். நான் சொல்லும் அனைத்தும் உண்மை" எனத் தொடர்ந்தும் பேசலானாள். "அன்று மோட்டார் சைக்கிளில் வந்த றூபன் மிகவும் மதுபோதையில் காணப்பட்டான். அரவிந்தன் வீதியில் சரியான வழியிலேயே சென்றுகொண்டிருந்தான். றூபனோ மிக வேகமாக வந்து அரவிந்தன் மேல் மோதினான். அரவிந்தனில் எவ்விதமான பிழையும் இல்லை. றூபனில்தான் பிழை" எனக் கூறினாள். அங்கு கூடியிருந்த அனைவரும் அவளின் துணிச்சலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். நீதிபதியும் அவளின் பேச்சில் உண்மை மட்டுமே இருப்பதைக் கண்டு றூபனிடமே பிழை இருப்பதை உணர்ந்துகொண்டார்.

பின்பு அவர் றூபனுக்கு 5 வருட சிறைத் தண்டனையும், அரவிந்தனின் உடைந்த காலினைச் சரிசெய்வதற்கான மருத்துவச் செலவினையும் கொடுப்பதுடன் புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றும் வாங்கிக் கொடுக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் பிறேமியின் துணிச்சலையும், உண்மைக்கே என்றும் முக்கியம் கொடுக்கும் தன்மையினையும் கண்டு அவளைப் பாராட்டினார். அங்கிருந்த அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். அரவிந்தனின் குடும்பமும் அவளுக்குக் கைகூப்பி நன்றி கூறினார்கள். பிறேமி தான் சொன்ன உண்மையினால் ஒரு குடும்பம் சந்தோசப்படுவதனால் கடவுளுக்கு நன்றி கூறினாள். நாமும் எப்போதும் உண்மை பேசி இயேசுவின் அன்புப் பிள்ளைகளாக வாழ்வோம்.

■ அருட்சகோதரி லூட்ஸ் FMM

குறள் 20:



நீர்இன்று அமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

**விளக்கம்**

**உலகில் வாழும் எத்தகையோருக்கும், வாழ்க்கை நீரின்றி நடைபெறாது; அதுபோலவே அற ஒழுக்கமும் மழையின்றி உலகத்தில் நிலைபெறாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மஞ்சரி

அண்மையில் முகநூலில் ஒரு கவிதை;
எழுதியவர் யார் என்று
தெரியவில்லை; படித்துப் பாருங்கள்.
கரைந்துபோவீர்கள்.

அழியோன்



வாழைத் தோட்டத்திற்குள்
வந்து முளைத்த
காட்டுமரம் நான்....!

எல்லா மரங்களும்
ஏதாவது
ஒரு கனிகொடுக்க
எதுக்கும் உதவாத
முள்ளுமரம் நான்....!
தாயும் நல்லவள்
தகப்பனும் நல்லவன்
தறிகெட்டுப் போன தென்னவோ
நான்...!
படிப்பு வரவில்லை
படித்தாலும் ஏறவில்லை
இங்கிலீஷ் டீச்சரின்
இடுப்பைப் பார்க்க....
இரண்டு மைல் நடந்து
பள்ளிக்குப் போவேன்.

பிஞ்சிலே பழுத்ததே....
எல்லாம் தலையெழுத்தென்று
எட்டி மிதிப்பான் அப்பன்
பத்து வயதில் திருட்டு ...
பனிரெண்டில் பீடி
பதின்மூன்றில் சாராயம் ....
பதினாலில் பலான படம்...
பதினைந்தில் ஒண்டி வீட்டுக்காரி
பதினெட்டில் அடிதடி.....
இருபதுக்குள் எத்தனையோ
பெண்களிடம் விளையாட்டு
இரண்டு மூன்று முறை கருக்கலைப்பு

எட்டாவது பெயிலுக்கு
ஹெட்மாஸ்டர் வேலையா
கிடைக்குமா....?
மண்லாறி ஓட்டினால்
லோடுக்கு நூறு தருவார்கள்.
வாங்கிய பணத்திற்கு
குடியும் கூத்தியாரும் என....

கைமீறிப் போன தென்று
கால்கட்டுக்கு ஏற்பாடு செய்தனர்
தாசிக்கு காசி
வேணும் ....
வருபவள் ஓசிதானே ...
மூக்குமுட்டத் தின்னவும்
முந்தானை விரிக்கவும்
மூன்று பவுனுடன் .....

விபரம் தெரியாத ஒருத்தி
விளக்கேற்ற வீடு வந்தாள்

வயிற்றில் பசித்தாலும்
வயிற்றுக்குக் கீழ் பசித்தாலும்
வக்கணையாய் பரிமாறினாள் ...
தின்னு கொழுத்தேனே தவிர ....
மருந் துக்கும் திருந்தவில்லை

மூன்று பவுன் போட.....
முட்டாப் பயலா நான் .....
இன்னும் ஐந்து வேண்டுமென்று
இடுப்பில் மிதித்து அனுப்பி
வைக்க...
கறவை மாட்டை சந்தைக்கு
அனுப்பி ...
தான் கட்டினவளை வீட்டுக்கு
அனுப்பினான்.....
சொந்தம் விட்டுப் போகாமல்
இருக்க....

மசக்கை என்று சொல்லி...
மணிக்கொருமுறை வாந்தி
வயிற்றைக் காரணம் காட்டி....
வாய்க்கு ருசியாய் சமைப்பதில்லை....

சாராயத்தின் வீரியத்தால் .....
சண்டையிட்டு வெளியே அனுப்ப ....
தெருவில் பார்த்தவரெல்லாம்
சாபம் விட்டுப்போனார்கள்.....

தர்ம ஆஸ்பத்திரியில்
சேர்த்துள்ளதாக....
தகவல் சொல்லியனுப்ப...
ரெண்டுநாள் கழித்து
கடமைக்கு எட்டிப்பார்த்தேன்....

கருகருவென
என் நிறத்தில்
பெண்குழந்தை
தினமும் என்மீது படுத்துக்கொண்டு
பொக்கை வாயில் கடிப்பாள்

9ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஸ்ரீதேவியே சினிமா தேவியே



ஸ்ரீதேவியே சினிமா தேவியே
முந்நூறு படங்களில் நடித்தீரம்மா
கண்ணூறு பட்டுத்தான் உனைக்
காலனும் கவர்ந்தனனோ

விண்ணுயர் புகழ்படைத்து
மண்ணுலகை வசமாக்கியவளே
கண்முன் தெரியுதம்மா – நீ
தோன்றிய காட்சிகளெல்லாம்

நீ பறந்து சென்றாலும்
நாங்கள்
எப்படி விட்டு விடுவோம்
கமலுடன் கைகோர்த்தீர்
இருவருமே சினிமாவில்
புகழ் அடைந்தீர்கள்

வானத்து நட்சத்திரம்
உமை வரவேற்று
கானங்கள் பாடியுமை
கைக்குள் எடுத்ததுவோ

சீனத்துப் பட்டுடல்
தீயினில் சங்கமிக்க
வானத்து வெண்ணிலவே
வலம் வருவாய் நீ
என்றும்! என்றுமே!

**கலைக்கோட்டன் அ. இருதயநாதன்**

ஹாலிவுட் சினிமாக்களில் மிக முக்கியமான இயக்குநர் 'அவதார்' படத்தை இயக்கிய, ஜேம்ஸ் கேமரூன். 'டெர்மினேட்டர்', 'டைட்டானிக்', 'ஏலியன்ஸ்' எனப் பல மெகா பட்ஜெட் படங்களை இயக்கியிருக்கிறார். அவை பல விருதுகளையும் அள்ளிக் குவித்துள்ளன. இதைத் தொடர்ந்து, 'அவதார்' படத்தின் நான்காம் பாகத்துக்கான வேலையில் இப்பொழுதே மிகுந்த ஈடுபாட்டோடு செயல்பட்டு வருகிறார். 2009ல் வெளியான 'அவதார்' திரைப்படம், ஹாலிவுட் சினிமா வரலாற்றில் ஒரு புது ட்ரெண்டையே உருவாக்கியது. பல்வேறு தொழில்நுட்பங்களும், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், வி.எஃப்.எக்ஸும் அந்தப் படத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதனால் 'அவதார்' படத்தின் இரண்டாம் பாகத்துக்கான எதிர்பார்ப்புகள் அதிகமாகியிருந்தது. எனவே, இதன் 2ம், 3ம், 4ம் பாகங்களையும் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மார்ச் 31 அன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஜேம்ஸ் கேமரூன், "இந்தப் படத்தின் படப்பிடிப்புக்காக உலகில் பல்வேறு நாடுகளைக் கருத்தில் கொண்டோம். எனது நண்பர் ஒருவரைச் சந்திக்க, வடக்கு ஐரோப்பாவில் உள்ள நாடான எஸ்டோனியா என்ற இடத்துக்குச் சென்றேன். படப்பிடிப்பை அங்கு நடத்தினால் நன்றாக இருக்கும் எனப் படக் குழுவினரோடு சேர்ந்து முடிவெடுத்தேன். இந்நாட்டைப் பற்றி எனக்கு பெரிதாக எதுவும் தெரியாது. ஆனால், எஸ்டோனியர்களின் கதைகளைக் கேட்கும்போது, அவர்களது கடவுள் இயற்கையில் இருப்பது தெரியவந்தது. 'அவதார்' படத்தின் நாவி கதாபாத்திரத்தையும், எஸ்டோனியர்களையும் மையப்படுத்தி, நான்காம் பாகத்தில் எடுக்கலாம் என்று தீர்மானித்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். பல கோடி ரூபாய் செலவில் உருவாக்கிக்கொண்டிருக்கும் 'அவதார் – 4', 2024ல் வெளிவர உள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்கில் இருந்து
அவளைக் காப்பாற்ற
நாளுக்கு நாலைந்து முறை குளிப்பேன்
சிகரெட் ஒருமுறை சுட்டுவிட்டது ....

விட்டு விட்டேன்....
சாராய வாசனைக்கு
வாந்தியெடுத்தாள்.....
விட்டு விட்டேன்
அவள் சொன்ன முதல் வார்த்தையே
அப்பாதான்....

அவளுக்காக எல்லாவற்றையும் விட்ட
எனக்கு
அப்பா என்ற வார்த்தைக்காக....
உயிரைக்கூட விடலாம் என்று
தோன்றியது....

இந்த சாக்கடையை
அன்பாலேயே கழுவினாள்
முழுசாய் மூன்று வார்த்தை பேச வராத
இந்த முகத்தைப் பார்த்து
திருந்திவிட்டேன்....

வளர்ந்தாள் ....
நானும் மனிதனாக வளர்ந்தேன்...
படித்தாள்
என்னையும் படிப்பித்தாள்
திருமணம் செய்துவைத்தேன்
நானும் கூட தாத்தாவானேன்
என்னை மனிதனாக்க...
எனக்கே மகளாய்ப் பிறந்த...
அந்த தாய்க்காக காத்திருக்கிறது
இந்த கடைசி மூச்சு

என் பெருவிரலை யாரோ
தொடுகின்றார்கள்....

என்னைப் போலவே ...
கண்களில் மச்சம்
சப்பை மூக்கு
கருப்பு நிறம்
நரைத்த தலைமுடி....
தளர்ந்த கண்கள்....

என் கைகளை முகத்தில் புதைத்துக்
கொண்டு
'அப்பா, அப்பா' என்று குமுறிக் குமுறி
அழுகின்றாள்...
அவள் எச்சில்
என் பெருவிரலில் பட

உடல்முழுவதும் ஈரம்பரவ
ஒவ்வொரு புலனும் துடித்து...
அடங்குகிறது.




26

வெற்றிதரும் தீய செயல்கள் என்றாலே
கவனம் நீ விரைவில் பள்ளம் வீழ்வாய்
புவியினில் என்றும் நின்று நிலைப்பதுவே
நல்ல செயல் ஒன்று தரும் வெற்றியே!



## குழந்தைகளை காக்க வேண்டிய மனித கடமை

இன்றைய உலகில் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய நம் ஒவ்வொருவரின் கடமை குறித்து டுவிட்டர் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை "குழந்தைகளைப் பாதுகாப்பவர்கள், இறைவன் பக்கம் இருப்பதுடன், குழந்தைகளை ஒடுக்கி வைப்பவர்கள் மீது வெற்றி கொள்பவர்களாகவும் உள்ளனர். அனைத்து விதமான சுரண்டல்களிலிருந்தும் அனைத்துக் குழந்தைகளையும் நாம் விடுவிப்போம்" என்று, திருத்தந்தை, வெளியிட்ட டுவிட்டர் செய்தி அமைந்திருந்தது.

மேலும், இந்த ஞாயிறன்று இரு டுவிட்டர் செய்திகளை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் முதல் டுவிட்டரில், "திருஅவை இளமையானது, ஏனெனில் நற்செய்தியே அதன் வாழ்வின் இரத்தமாக உள்ளது மற்றும், அதற்குத் தொடர்ந்து புத்துயிரூட்டி வருகின்றது" எனவும், தன் இரண்டாவது டுவிட்டரில், "நான் இடைவிடாது அமைதிக்காகச் செபித்துவரும் அதேவேளையில், அதே வண்ணம் செபிக்குமாறு நல்மனதுடைய அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். மேலும், அரசியல் பொறுப்பிலுள்ளோர் அனைவரும், நீதியும் அமைதியும் நிலவ தங்களால் இயன்ற அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும் என விண்ணப்பிக்கிறேன்" எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லொழுக்கம்


## நண்பர்களாக வாழ்வோம்

**முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்து அகம்நக நட்பது நட்பு.**

இது நட்பு பற்றிய வள்ளுவர் கருத்து.

தாய் தந்தையர் மீது அன்பு காட்டுகிறோம்; அது பாசம் ஆகிறது. நாட்டின் மீது அன்பு காட்டுகிறோம்; அது நாட்டுப் பற்று ஆகிறது. தெய்வத்தின்மீது அன்பு காட்டுகிறோம்: அது பக்தி ஆகிறது.

ஒத்த வயதினரோடு பழகுகிறோம்; உடன் படிப்பவர்களோடு பழகுகிறோம். அவர்கள் மீது அன்பு காட்டுகிறோம். அவர்களும் நம்மீது அன்பு காட்டுகிறார்கள். அது நட்பாக வளர்கிறது.



பிறைச் சந்திரன் ஒவ்வொரு நாளும் வளர்கிறது. அதுபோலவே நல்லறிவுடையவர் நட்பும் ஒவ்வொரு நாளும் வளரும். முகம் மட்டும் மலருமாறு பழகுவது நட்பு ஆகாது. அன்பினால் நெஞ்சம் மலருமாறு பழகுவதே நட்பு ஆகும். நட்பு கொள்வது சிரித்து மகிழ்வதற்காக மட்டுமன்று; நண்பர்கள் தவறு செய்யும்போது கண்டித்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்காகவே ஆகும்.

நண்பர்களுக்குத் துன்பம் நேரும் போது அதனைப் போக்க வேண்டும். ஒருவனுடைய ஆடை குலையும்போது கை என்ன செய்கிறது? உடனே விரைந்து சென்று ஆடையைச் சரிப்படுத்துகிறது. அதைப்போல உதவி செய்பவனே உண்மையான நண்பன் ஆவான்.

நாம் ஒருவரிடம் திடீரென்று நட்புப் பாராட்டக் கூடாது. முதலில் அவர் குணத்தை ஆராய வேண்டும்; அவர் செயல்முறைகளைக் கண்டறிய வேண்டும். நாம் நட்புக் கொள்ள நினைப்பவரிடம் உள்ள நல்ல குணங்களையும், கெட்ட குணங்களையும் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். நல்ல குணங்கள் மிகுதியாக இருப்பின் அவரிடம் நட்புக்கொள்ள வேண்டும். உற்றுழி உதவுவதே நட்புக்கு இலக்கணம் ஆகும். துன்பத்தில் பங்குகொள்வதே தோழமைக்கு இலக்கணம் ஆகும். நண்பர்களுக்கு எல்லா வகையிலும் உதவிசெய்தல் வேண்டும்.

மனிதன் என்பவன் ஒரு சமூகப் பிராணி. எனவே, சமுதாயத்தில் அவன் தனித்து வாழமுடியாது. ஒருவருக்கு ஒருவர் உதவியே வாழவேண்டும். அதற்கு நல்ல துணையாக அமைவது நட்பு ஆகும். நண்பர்கள் கூறும் அறிவுரைகளை நாம் கேட்டு நடக்க வேண்டும். நண்பர்களுக்கு நாமும் அறிவுரை கூறவேண்டும்.

எனவே, நல்ல நண்பர்களைத் தேர்ந்து, நட்பிற்கு இலக்கணமாய்த் திகழ்வோம்.

நன்றி: **நல்லொழுக்கக் கல்வி நூலிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை
வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 02

1) "தவக்காலம் செபம், தவம், தானம் எனும் ஆன்மீக அணிகலன்களால் அணி செய்யப்பட வேண்டியவை" எனக்கூறிய திருத்தந்தை யார்?

.................................................................................................

2) புனித வேர்னடேற்றின் பெற்றோரின் பெயர்களை எழுதுக:

.................................................................................................

3) அமெரிக்காவால் சமீபத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் எந்த வரிச்சலுகை நிறுத்தப்பட்டது?

.................................................................................................

4) அனைத்து இலங்கை பௌத்த சம்மேளனம் எப்போது கூட்டப்பட்டது? இது எத்தனை யாவது மகாநாடு?

.................................................................................................

5) விட்டமின் "டி" என்பது எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

.................................................................................................

6) "நோயாளரின் தூய பூசுதல்" எனும் அப்போஸ்தலிக்கப் படிப்பினையை எழுதிய திருத் தந்தையின் பெயர் என்ன?

.................................................................................................

7) "நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" எனப் பேதுருவிடம் இயேசு கேட்ட திருவிவிலிய வசனத்தின் இலக்கத்தைத் தருக:

.................................................................................................

8) 1925ல் திருத்தந்தை 11ம் பத்திநாதர் ஹோண்டுராஸ் குடியரசின் பாதுகாவலியாக அறிவித்த தூய மரியாவின் பெயர் யாது?

.................................................................................................

9) அமெரிக்க குழு ஆய்வின்படி பாதரசத்தைப் பயன்படுத்தி விமானத்தை இயக்கிய இலங்கை அரசன் யார்?

.................................................................................................

10) புனித லூக்கா நற்செய்தி 23:43 திருவசனத்தைத் தருக?

.................................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................


..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

வினாவிடைப் போட்டி - 02
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**தலைக்கனம் :**

இரண்டு சண்டைக் கோழிகள் மோதிக்கொண்டன. தோல்வி பெற்ற கோழி மூலையில் சென்று முடங்கிக்கொண்டது. ஜெயித்த கோழி கொக்கரித்துக் கொண்டே கொண்டையைச் சிலுப்பி நிமிர்ந்து சென்றது. வானத்திலிருந்து வல்லூறு பாய்ந்து வந்து கோழியை அள்ளிச் சென்றது. தோற்ற கோழி தத்தித் தத்தி வெளியே வந்து, தன்னை வெற்றி கொண்ட எதிராளியின் தோல்வியைக் கொண்டாடியது. ஒருவரின் வெற்றியைத் தட்டிப்பறிக்கும் வல்லமை அவருடைய தலைக்கனத்திற்கே உண்டு.

**சிறிய வலியைப் பொறுப்பவர்களே ....**

புகழ்பெற்ற ஓவியர் ஒனாயர், குமேட்டிஸம் நோயால் பாதிக்கப்பட்டார். கடும் கைவலியைப் பொருட்படுத்தாமல் ஓவியங்களை வரைந்துகொண்டிருந்தார். அவருடைய நண்பர், "வயதான காலத்தில் வலியின் உச்சத்தில் வரைவது அவசியமா?" என்று கேட்டபோது ஒனாயர் சொன்னார், "வலி நீடிப்பது சில மணி நேரங்கள், வரைவதன் இன்பமோ பல நாட்கள் நீடிக்கும். வரைகிற ஓவியமோ காலம் கடந்தும் நிலைக்கும்". பெரிய சாதனைகளுக்காகச் சிறிய வலியைப் பொறுப்பவர்களே ஜெயிப்பவர்கள்.

- ஜே.எச்.இரத்தினராஜா -


# நாவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர்



சொல்லென்ற மலரிலே பொருளென்ற புதுமதுச் சொட்டிச் சுரக்கு மமிர்த சுரபியாய் ஒளிர்ந்து, ஈழநாடு பெருமைகொள்ள, இரசிக உலகம் வாயூற ஆயிரம் பதினாயிரம் கவிதைகளால் தமிழன்னையை அலங்கரித்த பெருமைக்குரியவர்தான் "தங்கத் தாத்தா" நாவாலியூர்ச் சோமசுந்தரப் புலவராவார். அவரது ஆடிப் பிறப்பையும், கத்தரி வெருளியையும் படிக்காத இளம் மாணவர்களையும், அதிரவரு மாணிக்க கங்கையாறு பாயும் இலங்கை வளத்தைக் கேட்காத தமிழ் மகனையும், பனைமரக் கும்மியையும் தால விலாசத்தையும் பார்த்து வாயூறாத இரசிகனையும் இந்த நாட்டிற் காணமுடியாது. ஏறாத மேடும், தாயாட்டின் கதறலும், இலவுகாத்த கிளியும் எங்கள் புலவரீந்த அரும்பெரும் நிதியங்கள். "அன்னநடை பிடியினடை" என்ற ஆறுமுக நாவலர் பாடலும், தளர்விலாத் தொண்டு செய்தமைக்காகச் சூட்டிய 'தாரமாய்த் தாயானாள் கை'யும் அவர் நமக்குத் தந்த முது சொத்துக்கள். நாமகள் புகழ் மாலையும், கதிரைச் சிலேடை வெண்பாவும், தந்தையார் பதிற்றுப் பத்தும், மரதன் ஓட்டமும், மருதடி விநாயகர் பாமாலையும், சூரியன் துதியும், சுகாதாரக் கும்மியும், சாவித்திரி கதையும், உயிரிளங் குமரன் நாடகமும் அவர் ஆண்டாண்டாய் அனுபவிக்கத் தந்த செல்வங்கள். இன்னும் எத்தனை எத்தனையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அன்னை மரியே வாழ்க!

அன்னம்மா சகாயம்

ஆண்டவர் இயேசுவை பெற்றெடுத்த
அன்னை மரியே வாழ்க வாழியவே!
அன்புக்கே உருவான ஆரமுதே
அடைக்கலம் அம்மா உன் காலடியில்

வைகாசி மாதம் என்றால்
வானோர்கள் மகிழ்ந்திட பூலோகம்
வாழ் மாந்தர் ஆசி பெற
வந்துதித்தாயே வாழ்க மரியே!

அமலோற்பவியே தேவனின் தாயே
அனைவரையும் அரவணைக்க
அகிலத்தில் காட்சி தந்தாயே
ஆசீர் தந்து அன்பு காட்டினீரே!

செபமாலை ஓத சிறார்களுக்கு
சொன்னாயே இன்றும் உன் புகழ்
செபமாலையில் கமழுதம்மா
சேயர்கள் எம்மை காப்பாயே!

மரியாயின் பக்தரிடம்
மாசற்ற அன்பு கொள்வாயே
மாசில்லா உற்பவித்த தாயே
மாசற்ற வாழ்வு வாழ உதவிடுவாயே
வாழ்க மரியே! வாழ்கவே!

## இலங்கை மாணவர் வானூர்தி தயாரித்து சாதனை




இலங்கையின் திம்புலாகல, அரலங்வில விலயாய மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர், நான்கு பேர் பயணிக்கக்கூடிய வானூர்தி ஒன்றைத் தயாரித்துள்ளார். உயர் வகுப்பில் கற்கும் ஹிரத்த பிரசாத் என்ற மாணவரே இவ்வாறு வானூர்தியைத் தயாரித்துள்ளார். கல்விக் கூடத்தில் இடம்பெற்ற தொழில்நுட்ப கண்காட்சிக்காக அவர் அந்த வானூர்தியைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளார். தயாரிப்புக்காக தகடு, இரும்பு, தையல் இயந்திரங்களின் பகுதிகள், கணினிப் பகுதிகள் ஆகியவை பயன்படுத்தப் பட்டுள்ளதாகவும், இதை உருவாக்க, ஏறத்தாழ மூன்று மாதங்கள் எடுத்துக் கொண்டதாகவும், மாணவர் ஹிரத்த பிரசாத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இந்த மாணவர் இதற்கு முன்னர் பல புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளார். தான் தயாரித்த வானூர்தியை வானில் செலுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அரசுக்கு இவர் விண்ணப்பம் ஒன்றையும் விடுத்துள்ளார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிக எடையைக் குறைக்கவும், கொழுப்பு கூடாமல் தடுக்கவும் சில உணவுகள்



உடல் எடை அதிகரித்தமையால் அதைக் குறைக்க முடியாமல் ஜிம், உடற்பயிற்சி, உணவில் கட்டுப்பாடு என்று வருந்துபவர்கள் ஏராளம். ஆனால், அன்றாடம் சரியாக உணவு உண்டு வந்தாலே அதிக உடல் எடையானது குறைந்து விடுவதோடு ஆரோக்கியமாகவும் வாழலாம். அதிக எடை, குறிப்பாகக் கொழுப்பு கூடாமல் தடுக்கும் சில உணவுகளைப் பார்க்கலாம்:

**மஞ்சள்:** மஞ்சளானது ஒரு சிறந்த மருத்துவ குணம் வாய்ந்த பொருள் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய மஞ்சளைத் தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து, அதிக இரத்த அழுத்தம் ஏற்படாமலும் தடுக்கும். இரத்த சுழற்சியானது நன்கு நடைபெற்று, இதய நோய் ஏற்படாமலும் இருக்கும்.

**ஏலக்காய்:** இது ஒரு சிறந்த உணவுப் பொருள். இதை உண்டால் உடலில் உள்ள உடல் செயலியல் மாற்றம் அதிகரிப்பதோடு, உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைத்தும் விடும். மேலும், இது ஒரு சிறந்த செரிமானப் பொருள். ஆகவே, எந்த உணவு உண்டாலும், அது நன்றாக ஜீரணமாகிவிடும். ஆகவே, ஏலக்காயைத் தினமும் உணவுப் பொருட்களில் சேர்த்துக்கொண்டால் உடல் எடை குறையும்.

**மிளகாய்:**
உணவில் சேர்க்கப்படும் மிளகாய் கூடக் கொழுப்புக்களைக் கரைத்துவிடும் தன்மையுடையது. இதில் உள்ள 'கேப்சைசின்', உடல் செயலியல் மாற்றத்தை அதிகரிக்கச் செய்யும். கேப்சைசின் என்பது வெப்ப ஊட்டப் பொருள். அது இருக்கும் உணவுப் பொருளை உண்பதால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்துவிடும்.

**கறிவேப்பிலை:** கறிவேப்பிலை உடலில் இருக்கும் கொழுப்பு மற்றும் நச்சுப் பொருட்களை உடலில் தங்க விடாமல் வெளியேற்றும். மேலும், அதிக எடை இருப்பவர்கள், தினமும் 8 முதல் 10 கறிவேப்பிலையை வெறும் வாயில் உண்டால் நல்லது. இல்லையென்றால், கறிவேப்பிலையை அரைத்துத் தண்ணீரில் கரைத்துக் குடிக்க வேண்டும்.

**பூண்டு:** இது ஒரு சிறந்த கொழுப்பைக் கரைக்கும் பொருள். ஏனெனில், இதில் சல்பர் இருக்கிறது. பூண்டில் கிருமிகளை அழிக்கும் பொருளான அன்டி பக்டீரியல் இருப்பதோடு, தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்து உடலை விரைவில் மெல்லியதாக மாற்றும்.

**கடுகு எண்ணெய்:** இதில் மற்ற எண்ணெய்களை விடக் குறைந்த அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொழுப்புக்கள் உள்ளன. மேலும் இதில் பெட்டி அசிட், இருசிக் அசிட் மற்றும் லினோலிக் அசிட் போன்றவை இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் அன்டி அக்சிடன்ட், தேவையான வைட்டமின்கள் உள்ளதோடு, தேவையற்ற கொழுப்புக்களை அகற்றும். அதனால் இதயமும் ஆரோக்கியமாக இருக்கும்.

**முட்டைக்கோஸ்:** இதைச் சமைத்தும் உண்ணலாம் அல்லது பச்சையாகவே சாப்பிடலாம். அது உடலில் சேரும் கொழுப்புக்களை வேறுவிதமாக மாற்றி மற்ற உடலில் நடைபெறும் செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். இதனால் உடலானது பருமனடையாமல் இருக்கும்.

**தேன்:** இது உடல் எடையைக் குறைக்க ஒரு சிறந்த வீட்டு மருந்து. இதனை உண்டால் உடலில் சேரும் கொழுப்புக்களை சாதாரணமாக உடலில் நடைபெறும் செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே, தினமும் ஒரு டேபிள் ஸ்பூன் தேனைச் சூடான தண்ணீரில் கலந்து, விடியற்காலையில் குடிக்க வேண்டும்.

**மோர்:** பால் பொருளில் கொழுப்புக்கள் அதிகமாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், மோரில் 2.2 கிராம் கொழுப்பும், 99 கலோரியும் மட்டுமே உள்ளது. ஆகவே, இதைப் பருகுவதால் உடலுக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்துகள் கிடைப்பதோடு, கொழுப்பு மற்றும் கலோரியானது அதிகமாகச் சேராமல் எடையும் சரியான அளவு இருக்கும்.

## அழுக்கு, பித்த வெடிப்பு, சொரசொரப்பு...



வாரம் ஒருமுறை வாயகன்ற ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் பாதங்கள் மூழ்கும் அளவுக்குத் தண்ணீர் ஊற்றி, ஒரு கைப்பிடி கல் உப்பு, ஒரு டீஸ்பூன் ஷாம்பூ, 2 சொட்டு லவண்டர் எண்ணெய் ஆகியவற்றைச் சேர்க்கவும். இந்தத் தண்ணீரில் பாதங்களை அரை மணி நேரம் வைத்திருக்கவும். பிறகு, பீர்க்கன் நாரால் பாதங்களை மென்மையாகத் தேய்க்கவும். அழுக்கு நீங்கி, பாதங்கள் சுத்தமாகிவிடும். லவண்டர் எண்ணெய் கிடைக்காதவர்கள், லவண்டர் எண்ணெய் கலந்த ஷம்புவைப் பயன்படுத்துங்கள்.

ஒரு வாளி தண்ணீரில், ஒரு டீஸ்பூன் ஹைட்ரஜன் பெராக்சைடு (மெடிக்கல் ஷொப்பில் கிடைக்கும்) கலந்து, அதில் பாதங்களை அரை மணி நேரம் வைத்திருக்கவும். கால் நக இடுக்குகளில் இருக்கும் அழுக்கு வெளியேறிவிடும். இதற்கு மிதமான சுடுநீரைப் பயன்படுத்த வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். பலருக்கும் நகங்களின் இயல்பான இளஞ்சிவப்பு நிறம் மாறி... பிரவுன், மஞ்சள், கறுப்பாக இருக்கும். ஒரு வாளித் தண்ணீரில் அரை மூடி எலுமிச்சம் பழச்சாறு விட்டு, அதில் பாதங்களை அரை மணி நேரம் விடுங்கள். இதைத் தொடர்ந்து செய்துவர, நகங்க ளின் இயல்பான இளஞ்சிவப்பு நிறம் வந்துவிடும்.

நக ஓரங்களைச் சுத்தம் செய்வதற்கு, மெனிக்யூர் கிட் அவசியம் என்றில்லை. தீக்குச்சியின் மருந்தில்லாத பக்கத்தைப் பயன்படுத்தலாம்.

நீரிழிவு பிரச்சினை உள்ளவர்கள், மெட்டல் உபகரணங்களைப் பயன்படுத்தி, நகங்களையும் பித்த வெடிப்புகளையும் சுத்தப்படுத்தக்கூடாது. இவர்களுக்குப் பாதங்களில் உணர்வு குறைவாக இருக்கும் என்பதால், மெட்டல் உபகரணங்களால் கீறல் ஏற்பட்டு ரத்தம் வந்தாலும் தெரியாது. காயப்பட்டால் ஆறவும் ஆறாது.

கால் நகங்களை நேராக வெட்டுங்கள். அப்போதுதான் நகங்களில் அழுக்கு சேராது. பித்த வெடிப்பு இருப்பவர்கள், கால்களை ஷம்புத் தண்ணீரில் ஊறவிட்டு தேய்த்துக் கழுவுங்கள். சலி சிலிக் அசிட் (salicylic acid ) கலந்த க்ரீம்களை அதன் மேல் தடவி வந்தால், வெடிப்புகள் மெல்ல மெல்ல மறைய ஆரம்பிக்கும். பாதங்களின் மேற்புறத்தில் சொரசொரப்பாக இருந்தால், உங்கள் கைகளுக்கு இடும் க்ரீமையே, கால்களுக்கும் இடுங்கள். மெல்ல மெல்ல சொரசொரப்பு மறைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்


**-ஒரு குறும்பார்வை**

**அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

**6. இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனை: இன்றைய உலகில் திருஅவை** (Gaudium et Spes) டிசம்பர் 7, 1965

1962-1965ம் ஆண்டு வரையிலும் இடம்பெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கமானது திருஅவை வாழ்வில் மறுமலர்ச்சியினையும், மாற்றத்தினையும் கொணர்வித்த மாபெரும் நிகழ்வாகும். இச்சங்கமானது மானிடர் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் சமூக பிரச்சினைகளைக் குறித்து குறிப்பாக இன்றைய உலகில் திருஅவை (Church in the Modern World - Gaudium et Spes) எனும் கொள்கைத் திரட்டில் கலந்துரையாடியது. இவ்வேட்டின் முதற் பகுதியில்




மனித உழைப்பின் மாண்பினைக் குறித்து கலந்துரையாடுகின்றது. இன்றைய சமூக மயமாக்கலின் விளைவாக மாந்தரிடையே தோன்றியுள்ள உறவானது அன்பின் மற்றும் நீதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றது. உலகினை மாற்றியமைக்கின்ற பணியானது கிறிஸ்தவ நம்பிக்கையிலிருந்து பிறக்கும் பணியாகும் என்பதனை வலியுறுத்துவதுடன் வேறுபல முக்கிய கருத்துக்களையும் முன்வைக்கின்றது.

இவ்வேட்டின் இரண்டாம் பகுதியில் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு பற்றிய பல விடயங்களை சங்கம் வாதிடுகின்றது. மனிதரின் மாண்பினை அழிக்கத் தேடுகின்ற முதலாளித்துவம் மற்றும் சமவுடமை பொருளாதார முறைமைகள் இரண்டுமே ஏதோவொரு வகையில் தவறானவை என சங்கம் கருதுகின்றது (காண்க: எண் 65). தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தும் சங்கமானது தனிமனிதச் சொத்துரிமை எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றது. தனிச் சொத்து பொதுநலனுக்கு ஏதிராக செயற்பட முடியாது. அவ்வாறே உலகிலிருந்து வறுமையினை விரட்டவேண்டுமாயின் நிலச் சீர்திருத்தம் அவசியமானதென எண் 71ல் வலியுறுத்துகின்றது.

இவ்வேடானது உலகிற்கும் திருஅவைக்கும் இடையில் நடைபெற வேண்டிய உரையாடல் குறித்து அதிக கவனம் செலுத்துகின்றது. உலகில் வாழும் எந்தவொரு மனிதரையும் எதிரியாக நோக்காது அவருடன் திறந்த மனதுடன் உரையாடல் நிகழ்த்தி உறவினை வளர்க்கவேண்டுமென்பது சங்கத்தின் சிந்தனையாகும். இறைவனால் படைக்கப்பட்ட உலகினை நீதியும், அன்பும் நிலவும் சமூகமாக வளர்த்தெடுக்க வேண்டியது திருஅவையின் பொறுப்பாகும். "மனிதருக்குத் தம் இயல்பிலேயே சமூக வாழ்வு முற்றிலும் இன்றியமையாதது. இம்மனிதரே எல்லாச் சமூக நிறுவனங்களின் முதலும், பொருளும், முடிவுமாக இருக்கின்றனர். அவ்வாறே இருக்கவும் வேண்டும்" (எண் 25).

உலக நாடுகளுக்கிடையேயான உறவானது நட்பு, அன்பு, நீதி அடிப்படையில் அமைய வேண்டும். அணு ஆயுதப்போர் எந்தவிதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாது. உலகில் அமைதியினை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளிலும் திருஅவை ஈடுபட வேண்டும். உலக மாந்தரோடு ஒத்துழைக்க வேண்டும். இவ் வேடு தவிர்ந்த பொதுச்சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளுள் "மறைச் சுதந்திரம்" மற்றும் "கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருஅவைக்குள்ள உறவு" போன்ற ஏடுகளிலும் சமூக சிக்கல்கள் குறித்து கலந்துரையாடப்படுகின்றன.


**7. 'மக்களின் முன்னேற்றம்'**
(Populorum Progressio) மார்ச் 26, 1967

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் இரண்டு ஆண்டுகள் நிறைவில் திருத்தந்தை 6ம் பவுல் (சின்னப்பர்) அவர்கள் சமூக பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து வெளியிட்ட சுற்றுமடலே "மக்களின் முன்னேற்றம்" ஆகும். பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் பொருளாதார வளர்ச்சியினை அடைய, பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுகள் உதவிட வேண்டுமென ஆணித்தரமாக மடல் வலியுறுத்துகின்றது. அத்துடன் மக்களின் வளர்ச்சியென்பது வெறுமனே பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல மாறாக முழுமையான வளர்ச்சியாகும் (Integral Development) என்பதுடன் மனித மாண்புக்கு உகந்த சூழ்நிலையும் உருவாக வேண்டுமென அழைப்பு விடுக்கின்கிறது.




எல்லா (தனி/அனைத்து) மனிதருடைய நலனைப் பேணுவதே முன்னேற்றத்தின் முக்கிய பண்பாகும். முழு மனித முன்னேற்றம் என்பது கீழ் நிலையில் இருப்போரையும் முழு மனித முன்னேற்ற நிலைக்கு உயர்த்துவதேயாகும். முழுமையான ஒரு மனிதநல முதன்மைக் கொள்கை (Integral Humanism) எல்லா மனிதருடையவும், முழு மனிதருடையவும் நிறைவான வளர்ச்சியைக் குறிப்பதாகும். முழுமுதற் பொருளாம் இறைவனை ஏற்காத எந்தவொரு மனிதநல முதன்மைக் கொள்கையானது குறைவுடையதும், ஏற்க முடியாததும் ஆகும்.

கொடிய வறுமை, அறநெறிப் பண்புகளை ஒதுக்கிவிட்டு சுயநல வேட்கையுடன் செயற்படுதல், உடமையையும், அதிகாரத்தையும் நெறி தவறி பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற அநீதியான சமூக அமைப்புக்கள், உழைப்பாளர்களைச் சுரண்டுதல் போன்ற செயல்கள் அனைத்தும் மனித மாண்புக்கு எதிரானவையாகும். தனிச் சொத்தென்பது நிபந்தனைக்கு அப்பாற்பட்ட உரிமையல்ல. பொதுநலனுக்கு எதிராக அது செல்லமுடியாது. பரந்த நிலப் பரப்பினை தனிச் சொத்துரிமையாக வைத்துக்கொண்டு அதனைப் பயன்படுத்தாது தரிசு நிலமாக விட்டிருப்போரிடமிருந்து அதனைப் பறிமுதல் செய்து பொது நலனுக்காகப் பயன்படுத்தலாம் என்கிறது (எண் 23).

முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையினை கடுமையாகச் சாடுவதுடன் இதன் குறிக்கோள் எல்லாம் ஆதாயமே எனவும் குறிப்பிடுகின்றது. பொருளாதாரத்தின் மிக உயர்ந்த அளவீடு போட்டியே. பொது நலனையும், சமூகக் கடமைகளையும் கவனத்திற் கொள்ளாது, பொருள் உற்பத்திற்கான மூலதனம் மற்றும் பொருள் உற்பத்திக்கான கருவிகளைத் தனியாரே உடைமையாகக் கொள்வது இங்கு அனைத்திலும் மேலானதாக உயர்த்தப்படுகின்றது. இத்தகைய எல்லை மீறிய தனிச் சுதந்திரக் கொள்கை ஒரு விதமான சர்வாதிகாரப் போக்கினையே தோற்றுவித்துள்ளது (எண் 26).

சமூக அநீதிகளை அழித்து நீதியுள்ள சமூகத்தை உருவாக்குவதில் வன்முறையை பயன்படுத்தலாமா என்கின்ற கேள்விக்கு இச் சுற்றுமடல் பதில் பகர்கின்றது (எண்கள் 30 – 32). இராணுவ உபகரணங்களை கொள்வனவு செய்யச் செலவிடுகின்ற பணத்தை ஏழையரின் வாழ்வினை உயர்த்தப் பயன்படுத்தலாமெனவும் பகர்கின்றது (எண் 48). நீதிக்கும், அமைதிக்கும் இடையிலான உறவினைத் தெளிவாகக் கோடிட்டு காட்டுகின்றது. போர் இல்லாதிருத்தல் அமைதியாகி விடாது மாறாக நீதி நிலவினால்தான் அமைதி உருவாகும் என்கின்ற வத்திக்கான் சங்கப் போதனையை மீளவும் வலியுறுத்துகின்றது.

**8. இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகளின் போதனை (1968 முதல்...)**


திருஅவையின் சமூகப் போதனையில் இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகளின் போதனை முக்கிய இடத்தை வகிக்கின்றது. 1968ம் ஆண்டில் கொலம்பிய நாட்டின் மெதயீன் (Medellin) நகரில் கூடிய இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழு (CELAM) 'நீதி,' 'அமைதி,' 'ஏழ்மை' எனும் தலைப்புக்களில் போதனை ஏடுகளை வெளியிட்டது. அதன் பிரதான கருத்தாக அமைந்தது யாதெனில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி "ஏழைகள் சார்பாகச் செயற்படுதல்" (Option for the Poor) அனைத்துக் கிறிஸ்தவர்களும் கைக்கொள்ள வேண்டிய அடிப்படைத் தத்துவம் என்பதாகும்.


தொடர்ந்து இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழு 1989ல் மெக்சிக்கோ நாட்டின் புவேப்லா (Pueblo) நகரிலும், 1992ல் தொமினிக்கன் குடியரசின் சாந்தோ தொமிங்கோ (Santo Domingo) நகரிலும், 2007ல் பிரேசில் நாட்டின் சான் பவுலோ...

19ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## ஓ! ஜெருசலேமே!

**கடந்த இதழ் தொடர்ச்சி ....**

இஸ்ராயேலின் வரலாற்றை விவிலியம் கூறுகின்ற வகையில், ஜெருசலேமின் வரலாறு கி.மு. 1,000 ஆண்டளவில் ஆரம்பமாகிறது. ஐக்கிய இஸ்ராயேல் இராச்சியத்தினது தலைநகரமாக, அது தாவீதின் நகரம் (City of David) பெயர் பெறுகின்றது. அதனால் அதுதான் ஜெருசலேமின் ஆரம்பம் என்றோ, வரலாற்றின் தொடக்கம் என்றோ கருதிவிட முடியாது. தாவீதின் முன்னம் அரௌனா என்கின்ற ஜெபசேய அரசன் ஓஃபல் (Orphel) என்கின்ற இடத்தில் அமைந்திருந்த ஜெருசலேமை ஆண்டான் என்றும் விவிலிய குறிப்புக்கள் கூறுகின்றன. அதே குறிப்புக்களின்படிக்கு அந்த இடத்திலிருந்து ஜெருசலேம் நகர் பின்னர் தெற்கு நோக்கி வியாபித்து தாவீதினால் இஸ்ராயேல் இராச்சியத்தின் தலைநகராகப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கின்றது. இதற்கு ஆதாரமாக சாமுவேல் ஆகமத்தில், அவர், அரௌனாவிடமிருந்து வாங்கிய சூடடிக்கும் நிலத்தில் ஒரு பீடத்தைக் கட்டியதாகக் குறிப்பிடுவதை ஆதாரமாகக் கொள்ள முடியும்.

ஜெருசலேமை வளப்படுத்தும் முக்கிய நீரூற்றான கிகோனைச் (Gihon Spring) சுற்றி கி.மு. 4,500 – 3,500 ஆண்டு காலவாக்கில் குடியேற்றங்கள் நடந்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். ஜெருசலேம் தொடர்பான முதலாவது குறிப்பு அதாவது, இடைக்கால எகிப்திய சாபக் குறிப்புக்களில் கி.மு. 2,000 ஆண்டளவில் அது ருசாலிமம் எனக் குறிப்பிடப்படுவதாக தெரிய வருகிறது. இது பொதுவாக அரபிக் மொழியிலும், ஹீப்ரு மொழியிலும் சமாதானத்தைக் குறிக்கிறது என்று கூறப்படுவதுண்டு. அதே நேரம் கானானேய மொழியில் இது ‘அதிகாலைக் கடவுளை’ குறித்து நிற்கின்றது.

**கானானேய மற்றும் புதிய எகிப்து இராச்சிய காலகட்டம் :**

புதைபொருள் ஆய்வானது கி.மு. 1,700 ஆண்டளவில் கானானேயர்கள் தமது நகரத்தின் பண்டைய நீர்ப்பாசனத்தைக் காப்பதற்காக சுமார் 4 முதல் 5 தொன் வரையிலான எடைகொண்ட பாறாங் கற்களைப் பயன்படுத்திப் பெரும் மதிற் சுவரைக் கட்டி எழுப்பினார்கள் என்கின்றது. இருந்தும் கி.மு. 1,550 – 1,400 ஆம் ஆண்டு காலவாக்கில் புதிய எகிப்திய இராச்சியமானது முதலாம் ஆமோஸ் மற்றும் முதலாம் துட்டுமோஸ் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டு நிறுவப்பட்டபோது ஜெருசலேம் அதற்கு அடிமையாகிப்போனது. இது தொடர்பாக ருசாலிமம் (ஜெருசலேம்) தலைவன் அப்தி–ஹெபா எழுதிய தொடர்பாடல் கிடைக்கப்பெற்று இருக்கிறது. வெண்கல காலகட்டம் முடிவுக்கு வந்ததையடுத்து இந்தப் பிராந்தியத்தில் எகிப்திய ஆதிக்கம் மறைந்து கொண்டு போகத் தொடங்கியது. கி.மு. 1,178 இல் எகிப்திய மன்னன் மூன்றாம் ரம்சேசுக்கும், கானானேயர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து (எகிப்தியர்கள் இவர்களை ‘கடல் மக்கள்’ என்று குறிப்பிடுகிறார்கள்) இது முற்றுப் பெறுகிறது. அதே கையோடு பிராந்திய இராச்சியங்கள் தலை தூக்க ஆரம்பிக்கின்றன. இந்த நேரத்தில் ஜெருசலேம் ஜெபுஸ் (Jebus) என்று அறியப்பட்டிருந்தது மட்டுமல்லாது அங்கிருந்திருக்கக் கூடிய கானானேயர்கள் ஜெபுசுக்கள் என்றும் அறியப்பட்டிருந்தனர்.

**சுயாதீன இஸ்ரேல் மற்றும் யூதா (தாவீதின் கோத்திர) காலகட்டம் :**

விவிலியத்தின்படிக்கு ஜெருசலேமுக்கான இஸ்ராயேலருக்குரிய சரித்திரமானது சுமார் கி.மு. 1,000 ஆண்டளவில், ஜெருசலேம் நகரம் தாவீது அரசரின் உறைவிடமாக மாறியதிலிருந்து தாவீதின் நகரமாக, ஐக்கிய இஸ்ராயேலின் தலை நகரமாக உருவானதிலிருந்து ஆரம்பமாகின்றது. சாமுவேல் ஆகமத்தின்படி, ஆரம்பத்தில் இஸ்ராயேலர்கள் ஜெருசலேம் நகரைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகளை ஜெபுசுக்கள் தடுத்து நிறுத்தினர் என்றும், அம் முயற்சிகளைத் தாவீது அரசர் கேலி பண்ணினாலும், அங்கவீனர்களாலும் ஏன் குருடர்களாலும் கூட இஸ்ராயேலர்களைத் தோற்கடித்து விடமுடியும் என்று ஜெபுசுக்கள் வெளிப்படையாக நையாண்டி செய்திருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. அந்த அளவுக்குத் தங்கள் வல்லமையின் மேலும், இஸ்ராயேலர்களின் இயலாமை மேலும் ஜெபுசுக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சாமுவேல் ஆகமத்தின் மசோரிட்டி (விவிலியத்தின் ஹீப்ரு மொழியின் பாரம்பரிய எழுத்துமொழி வகை) மொழி மூலத்தில் தாவீது ஜெருசலேம் நகரைச் சூழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மூலம், அதாவது, நகருக்குள் செல்லும் நீர்ச்சுணை (இதுவே கிகோன் நீரூற்று வழியென்று அறியப்படுவதுடன் அது மிகவும் பலமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது என்றும் தெரிய வந்துள்ளது) வழியாகத் தனது படையினரை அனுப்பி உள்ளிருந்தே நகரைத் தாக்கி கைப்பற்றினான் என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் பலத்த பாதுகாப்பு அமைப்புக்கு மத்தியில் அதை வெல்வதற்கு சூழ்ச்சியைத் தவிர தாவீதினால் வேறொன்றும் பண்ணியிருக்க முடியாது என்பது கவனிக்கத்தக்கது. இருப்பினும் கி.மு. 3 முதல் 2 வரையிலான நூற்றாண்டு காலகட்டத்தில் கிரேக்க மொழியான 'செப்தகாஜின்ற்' எழுத்து மொழிபெயர்ப்பில் இச் சந்தர்ப்பம், தாவீது வாளின் வலிமை கொண்டே ஜெபுசுக்களை வீழ்த்தினான் எனக் குறிப்பிடப்படுகின்றமையையும் கவனிக்கத்தக்கது. தொல்பொருள் ஆய்வாளர்கள் கூட நீர்ச்சுணை வழியான தாக்குதல் என்பது அதன் பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்றிருக்க முடியாததொன்று என்றே கருதுகின்றார்கள்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த அரௌனா என்கின்ற அரசனிடமிருந்து வாங்கிய நிலத்தில் பலிப்பீடம் அமைக்கப்பட்டது என்று கூறப்படுவதை ஒரு சில விவிலிய ஆய்வாளர்களால், தாவீதின் காலத்தின் முன்னமே இஸ்ராயேலர்களுக்கு அங்கு ஒரு இடமிருந்தது என்று வலியுறுத்துவதற்காகவும் இருக்கலாம் என்கின்றனர். தாவீது தான் வசதியான மாளிகையில் குடியிருக்கின்றபோது இறைவனது சமூகம் உடன்படிக்கைப் பேழையில் சாதாரண ஒரு கூடாரத்தில் இருப்பதா என்றெண்ணி ஜெருசலேமில் ஒரு ஆலயத்தை அமைத்து உடன்படிக்கைப் பேழையை அதில் பிரதிஷ்டை பண்ணத் திட்டமிட்டான். அதற்காகத் தேக்கு மரங்கள் போன்ற பல உயர்தர கட்டிடப் பொருட்களையும் சேகரிக்கத் தொடங்கினான். இருப்பினும் அவனது வாழ்நாளில் அவன் இறைவனை அவமதிக்கும் வகையில் தவறுகள் புரிந்ததினாலும், போர்களின் போது எண்ணற்றோரைக் கொன்று குவித்து நிரம்ப இரத்தத்தால் மண்ணை நனைத்த காரணத்தினாலும் அவன் கையால் தனக்கு ஆலயம் அமைப்பதை விரும்பவில்லை. மாறாக, அவனது மகன் சாலமோன் மூலமாகத் தான் அதனைக் கவனித்துக் கொள்வதாகத் தெரிவித்து விட்டார். பின்னாட்களில் சாலமோன் அரசன் ஜெருசலேமில் அதை நிறைவேற்றி வைத்தான். அந்த ஆலயத்தின் பெருமைபற்றி விவிலியம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. குறிப்பேட்டுப் பத்தகம் இந்த இடத்தை தாவீது அமைத்த பீடம் இருந்த இடமாகச் சுட்டிக் காட்டுகின்றது. இந்தக் கோயில் பிரதான கலாச்சார மத்திய நிலையமாகத் திகழ்ந்தது என்கிறார்கள். இந்தக் கோயில் தவிரவும் தன் மாளிகையுட்படப் பல பிரமாண்டமான கட்டிடங்களையும் சாலமோன் அமைத்தான்.

சாலமோனின் இறுதிக் காலகட்டத்தில் (கி.மு. 930 ஆம் ஆண்டுவாக்கில்) யூதாவின் இராச்சியம் இஸ்ராயேல் இராச்சியத்திடமிருந்து பிரிவடைந்தபோது ஜெருசலேம் யூதாவின் இராச்சியத்தின் தலைநகரமானது. அதே சமயம், இஸ்ராயேல் இராச்சியம் தனது தலை நகரை சமாரியாவிலிருந்த செக்கேம் எனுமிடத்திற்கு மாற்றிக் கொண்டது. ஆனாலும், அது 7ம் நூற்றாண்டளவில்தான் அதுவும் ஒரு பிரதியீட்டு நகரமாக அமையக் கூடியதாக இருந்தது என்று ஆய்வாளர் ஒருவர் சுட்டிக் காட்டுகின்றார்.

விவிலிய மற்றும் பிராந்திய தொல் பொருள் ஆய்வுகளின் அடிப்படையில் கி.மு. 925 முதல் 732 வரையிலான காலப்பகுதியில் அப்பிராந்தியம் மிகவும் ஸ்திரம் குன்றியதாக இருந்திருக்கிறது. இதனால், கி.மு. 925ல் எகிப்திய மன்னன், முதலாவது செஷோஷங்க் பரவோன் என்கின்ற அரசனால் இப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. விவிலியத்தில் கூறப்படும் (மூன்றாவது இடைக்கால காலப் பகுதியில்) ஜெருசலேமைக் கைப்பற்றி கொள்ளையிட்ட முதலாவது ஷிஷேக் பரவோனாக இவன் இருக்க நிறைய வாய்ப்புண்டு. இதையடுத்து சுமார் 75 ஆண்டுகள் கழிந்து யூதாவின் கோத்திரத்து ஜெகோஷபாற் மன்னன் தலைமையில் ஜெருசலேம் படைகள் முக்கியமான கார்கார் யுத்தகளத்தில் அசிரிய அரசன் மூன்றாம் ஷல்மநேசர் மன்னனுக்கெதிராக பயங்கரமாக மோதிக் கொண்டன. அந்த வேளையில் ஜெகோஷாபற் இஸ்ராயலின் வட இராச்சிய அதிபதியான அஹாப் என்பவனுடன் நட்பு பாராட்டி வந்தான். இருப்பினும் என்ன? இந்த யுத்தம் முடிந்த கொஞ்ச நாட்களில் ஜெருசலேமை வேட்டை நாய்கள் சூழ்ந்து தாக்கிக் கடித்துக் குதறுவதுபோல பிலிஸ்தேயர்கள், அரபுக்கள், எத்தியோப்பியர்கள் ஆகியோரால் சூறையாடப்பட்டது. மன்னன் ஜெஹோராமுடைய அரண்மனை கொள்ளையிடப்பட்டதுடன் அவன் இளைய மகன் ஜெஹோஸ் தவிர்ந்த ஏனைய அனைவரும் சிறையெடுக்கப்பட்டனர்.

■ தொடரும் .....

17ம் பக் தொடர்....

(San Paulo) நகரிலும் கூடி இலத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகளை விவாதித்து ஏடுகளை வெளியிட்டன. இங்கு விவாதிக்கப்பட்ட பல பிரச்சினைகள் அனைத்துலக திருஅவையிலும் தாக்கத்தைச் செலுத்தின. அவற்றின் சில முக்கிய கருத்துக்களை நோக்குவோம்:

- ஏழைகள் சார்பாக செயற்படுதல்
- அடிப்படைக் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கி கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்தல்
- நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் மக்களின் வாழ்வினை முன்னேற்றுவதற்கும் இடையிலான உறவினை வலியுறுத்தல்
- கிறிஸ்தவ நற்செய்தி சமூக, அரசியல், பொருளாதார, கலாசார வாழ்வினை ஊடுருவி புதியதோர் உலகத்தை உருவாக்கத் தூண்டுதலாக உள்ளது என்கின்ற கருத்தை வலியுறுத்திக் காட்டுதல்.
- சமூக மாற்றத்தைக் கொணர்வதில் அமைதி முறைகளைப் பின்பற்ற வேண்டுமே தவிர, வன்முறை மார்க்கத்தைக் கையாள முடியாது.

(சமூக அக்கறை தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம்



# மாணவர் பக்கம்

க.பொ.த உயர்தரம்

- ஸ்ரீலினி கஜேந்திரன் -

**அடிப்படை வாதக் கிறிஸ்தவ இயக்கங்கள்:**

சமீப காலமாக இலங்கைத் திருச்சபையானது எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சினை இலங்கையிலே மூலை முடுக்கெல்லாம் தோன்றியிருக்கும் அடிப்படைவாதக் கிறிஸ்தவக் குழுக்களாகும். இவைகளின் விளைவாகத் திருச்சபையின் நற்செய்திப் பணியானது அதன் நம்பகத் தன்மையில் பெரும் பாதிப்பினை அடைந்துள்ளது.

இன்று இலங்கையிலே ஆயிரக்கணக்கான சபைகள் தோன்றி அவை ஒவ்வொன்றும் தாங்களே நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தோற்றுவித்த உண்மைச் சபையெனப் பல பிரச்சாரங் களை மேற்கொண்டு வருகின்றன. ஏனைய அனைத்தும் போலிச் சபைகளெனப் பொய்ப் பிரச்சாரங்களை செய்துவருகின்றன. ஒன்றுடனொன்று போட்டி போட்டு மற்றயதை ஓரங்கட்டிப் பேசியும் வருகின்றன. இவ்வாறானவைகளின் போதனைகள், பிளவுகள், பிரிவினைகள், வேறுபாடுகள், முரண்பாடுகள் அனைத்துமே திருச்சபையின் போதனைகளுக்குப் பெரும் தடைக்கல்லாக அமைந்து காணப்படுகிறது. யோ 17:21இன்படி இயேசுவின் "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே, நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" எனும் நற்செய்திப் பணிக்கமைய வாழ்வதில் கடினம் ஏற்பட்டுள்ளது.

திருச்சபையின் நம்பகத் தன்மைக்கு ஒற்றுமையே காரணம் என ஆண்டவர் கருதுகிறார். இவ்வடிப்படைவாதக் குழுக்களுக்கிடையே இவ்வாறான வேறுபாடுகள் இருப்பினும் ஒரு பொதுத் தன்மையும் உண்டு. அதாவது, அவர்களுக்கும் ஒரு பொது எதிரி உண்டு. ஒரு சிறிய கடுகு விதை போல் ஆரம்பித்த திருச்சபையானது இன்று பெரிய விருட்சமாகி, பல கோடிக் கணக்கான மக்களைத் தன்னுள்ளே கொண்ட ஏக, பரிசுத்த, அப்போஸ்தலிக்க, கத்தோலிக்க திருச்சபையே அவர்களின் ஜென்ம எதிரியாகும். இதனை நாம் அவர்களின் பேச்சுக் களிலும், போதனைகளிலும், செயற்பாடுகளிலும் காணமுடியும்.

இவர்கள் அனேகமாய் கத்தோலிக்கர் மட்டிலேயே காணப்படுகின்றனர். கத்தோலிக்க விசுவாசிகளை ஏமாற்றித் திருச்சபையிலிருந்து களவாடிச் செயற்படுகின்றனர். இத்தகையோர், முன்னர் கத்தோலிக்கராகவே காணப்பட்டவராவர். கத்தோலிக்கரைத் திருச்சபையிலிருந்து பிரித்து, அவர்களின் தொகையைக் குறைத்து, படிப்படியாக அதன் வலிமையினை நலிவடையச் செய்வதே இவர்களின் குறிக்கோளாகும். தங்கள் சபைகளுக்கு வந்த முன்னைய கத்தோலிக்கர்களை, கத்தோலிக்க ஆலயங்களுக்கு செல்வதை, வழிபாடுகளில் பங்கெடுப்பதை, அவர்களின் உறவினர்களின் நன்மை தீமைகளில் பங்கெடுப்பதை தடைசெய்து, கத்தோலிக்கத் திருச்சபை மட்டில் வெறுப்பினையும் மூட்டி வருகின்றனர். எனவே, இத்தகையோரிடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதும், திருச்சபையினைப் பாதுகாத்தலும் திருச்சபையின் இன்றைய பாரிய பொறுப்பாய் உள்ளது.

அண்மைக் காலங்களில் இவ்வடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள்,போதனைகள், பிரச்சாரங்கள், அணுகுமுறைகள் பற்றிப் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவர்கள் பணம் கொடுத்து, பொருளுதவி செய்து, ஏமாற்றி மக்களைத் தம் வசம் இணைப்பதாக. இத்தகைய செயலானது "கட்டாய மதமாற்றம்" எனப்படுகிறது. இவ்வாறான செயல் இந்துக்கள், பௌத்தர்கள் மட்டில் பெரும் குழப்பத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும், கத்தோலிக்கத் திருச்சபைக்கும், ஏனைய சபைகளுக்கும் வித்தியாசம் தெரியாதோர் இப்பழியினைக் கத்தோலிக்கர் மேலே போட்டு விடுகின்றனர். இதனால், மதங்களுக்கிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு சமாதானம் என்பன சீர்குலைந்து காணப்படுகின்றன. இதனால் 2004ல் மதமாற்றச் சட்டம் பற்றிய ஓர் மசோதா பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, இவ்வடிப்படைவாதக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் மரியாளின் புகழ்... 37

## இடைவிடா சகாய அன்னை:
### போர்ட் - அ-பிரின்ஸ், ஹைட்டி



உரோம் நகரத்தில் இருந்த இடைவிடா சகாய அன்னையின் திருவுருவப் படத்தின் நகலானது, போர்ட்-அ-பிரின்ஸில் உள்ள புனித பிரான்சிஸ் ஆலயத்தில் 1882, பிப்ரவரி 5 அன்று நிறுவப்பட்டு, கீழே இருந்த நகரில் பெரியம்மையால் அவதியுறும் மக்களுக்கு ஆசி வழங்குவதற்காக மலைமேல் எடுத்துச் செல்லப்பட்டது. அதன் பிறகு பெரியம்மை நோய் பரவுவது நின்றது. இடைவிடா சகாய அன்னை ஹைட்டி நாட்டின் அதிகாரபூர்வ பாதுகாவலியாக 1942ல்
அறிவிக்கப்பட்டார். 2007ம் ஆண்டில், அன்னையின் அற்புத நிகழ்வு நடைபெற்ற 125ஆவது ஆண்டுவிழா பிப்ரவரி 5 அன்று கொண்டாடப்பட்டது. பெல் ஏரில் உள்ள ஆலயத்தை இடைவிடா சகாய அன்னையின் தேசிய திருத்தலமாக ஹைட்டி நாட்டின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அறிவித்தது. 2010ல் நிகழ்ந்த நில நடுக்கத்தில் இந்த ஆலயம் அழிவுக்குள்ளானது. 2010 டிசம்பர் 8 அன்று நடைபெற்ற நிகழ்வில், தங்கள் நாட்டை மீண்டும் அன்னையின் பாதுகாப்பில் ஒப்படைக்கும் சடங்கு ஹைட்டி கத்தோலிக்க ஆயர்களால் நடத்தப்பட்டது. இடைவிடா சகாய அன்னையின் திருநாள் ஜூன் 27 அன்று கொண்டாடப்படுகிறது.

# எண்ணிப்பார்க்கையில்...



## நல்லதாக ஒரு நினைவு

ஒரு நாள் இல்லையேல் ஒரு நாள்
நாம் விரும்புகின்றோமோ இல்லையோ
பல உள்ளங்களில் நாம் வெறும்
நினைவுகளாகவே அமர்ந்திருப்போம்!
நம் உறவுகள், செயல்கள்
நல்லவையாக இருந்திருந்தால்
நம் நினைவுகள் நல்லவையாக இருக்கும்,
நமக்கென்று அவர் மனதில்
சிலை வைத்ததுபோல் இருக்கும்!
நம் வாழ்வு பிழைத்திருந்தால்,
பிறர் மனம் நம்மால் காயப்பட்டிருந்தால்,
அடுத்தவர் நினைவில் கூட
நமக்கு கல்லெறிதான்!!
ஆற அமர எண்ணிப் பார்த்தால் .. ..
நம் வாழ்வு மண்ணில் நன்கு
அமைந்திருந்தாலே அது
நாம் இருக்கின்றோமோ இல்லையோ
என்றும் போற்றப்பட வழியிருக்கும்
என்பது நமக்குத் தெளிவாகும்!

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

**"சிரிப்பைவிடத் துயரமே நல்லது. துயரத்தால் முகத்தில் வருத்தம் தோன்றலாம்; ஆனால், அது உள்ளத்தைப் பண்படுத்தும்.
ஞானமுள்ளவரின் உள்ளத்தில்
துக்க வீட்டின் நினைவே இருக்கும்;
மூடரின் உள்ளத்திலோ சிற்றின்ப வீட்டின்
நினைவே இருக்கும்"**
(சபை உரையாளர் 7: 3-4)

குழுக்களினால், இலங்கைத் திருச்சபையானது இன்று பல எதிர்பாராத விளைவுகளுக்கும், விமர்சனங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஏழைக்குத் துணை நீயே...!

சிறுதோணி வலைவைத்து வாவி நீரில்
சென்று தொழில் செய்துவரும் சூசை ஏழை
கறியாக்க மீனோடு அரிசி சாமான்
கட்டாயம் கொண்டுவர வேண்டும் ஆனால்
சிறிதளவும் மீன்படுதல் இன்றிச் சிலநாள்
செய்வதறியாமல் அவன் மனசு நொந்து
கரையேறி வீடுவந்து சேரும் போது
கண்ணீரால் வரவேற்பாள் மனைவி மேரி.

பட்டினியாய்ப் போகுதுகள் பள்ளிக்கூடம்
பசியாற்ற மதியம் நாம் என்ன செய்வோம்!
சொட்டரிசிப் பிடிபோட்டு வைத்த பானை
தொங்கியது அதையவிழ்த்து நானும் மெல்லக்
கொட்டியிந்தச் சுளகுக்குள் புடைத்துப் பார்த்தால்
குறையாமல் மூனுசுண்டு தேறும் போல....
மட்டாக உண்பதற்குச் சோறானாலும்
மக்களுக்குக் கறிவேணும் என்ன செய்வம்....?

"தேத்தண்ணி கொஞ்சமெடு மேரி நானும்
திரும்பவும் போய் வலைவீசிப் பார்த்து வாறன்"
ஊத்தியவள் தான் கொடுத்த தேநீர் தன்னை
உள்ளங் கை இனிப்பு நக்கிக் குடித்துப் போனான்
காத்தோடு மழையிருண்டு பொழியலாச்சு
கவலையவள் நெஞ்செலாம் நிறையலாச்சு
ஆத்தோடு போனவரை அந்தோனியாரே காப்பாய்!
அழுதபடி ஜெபித்திருந்தாள் ஏழைக்குத்துணை நீயே இறைவா என்றே!

■ அருட்பாவலர் நிலா தமிழின் தாசன் ■

## பித்தம் தொடர்பான பிரச்சனைகளை போக்கும் எளிய இயற்கை மருத்துவ முறை

இஞ்சித் துண்டு தேனில் ஊறவைத்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் தெளிந்து ஆயுள் பெருகும். இஞ்சிச் சாறு, வெங்காயச் சாறு தேன் கலந்து குடித்தால் பித்த மயக்கம் தீரும்.

பழுத்த மாம்பழத்தைச் சாறு பிழிந்து அந்தச் சாறை அடுப்பில் லேசாகச் சூடேற்றிப் பின் ஆறவைத்து சாப்பிட்டு வந்தால் பித்தம் குறையும். எலுமிச்சைச் சாதம் வாரத்தில் மூன்று நாள் காலையில் சாப்பிட்டால் பித்தத்தைத் தணிக்கும். ரோஜாப்பூ கஷாயம் பால் சீனி கூட்டி சாப்பிட்டால் பித்த நீர் மலத்துடன் வெளியேறும்.

⚜

பொன்னாவரை வேர், சுக்கு, மிளகு, சீரகம் கஷாயம் குடித்தால் பித்த பாண்டு தீரும். விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் தினசரி ஒன்று சாப்பிட்டு வந்தால் பித்தத்தைக் குறைக்கலாம். அகத்திக் கீரைச் சாப்பிட்டு வந்தால் பித்தக் கோளாறுகள் அகலும். பனங்கிழங்கு சாப்பிட்டால் பித்தம் நீக்கி உடல் பலம் பெருகும். தோடம்பழம் சாப்பிட்டால் உடல் உஷ்ணத்தைத் தணிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிலேயே கனவுகளை விதையுங்கள்

சிறுவனாக இருந்தபோது முதல் முறையாகத் திசை காட்டும் கருவி (காம்பஸ்) ஒன்றைப் பார்த்து அதிசயித்தார் அல்பர்ட் ஐன்ஸ்டைன். எப்படித் திசையை மாற்றினாலும் அதிலிருந்த முள் வடக்கு நோக்கியே நகர்ந்ததைக் கண்டு, அப்படி அதை இயக்கும் கண்ணுக்குத் தெரியாத அந்த சக்தியைப் பற்றி ஐன்ஸ்டைன் அறியத் துடித்தார். அவருடைய அந்த ஆவல் அறிவியல் துறை நோக்கி அவரைப் பயணம் செய்ய வைத்தது. இளமை முழுவதும் ஐன்ஸ்டைனுக்கு இருந்த அந்த அறிவியல் தாகம், அந்த நூற்றாண்டின் இணையற்ற அறிவியலாளராக அவரை மாற்றியது. அதுவரை இருந்த பல அறிவியல் கோட்பாடுகளைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டு புதிய வரலாறு படைத்தார் ஐன்ஸ்டைன்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது, இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள், இராமேசுவரம் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தார். 16-8-1947 திகதியிடப்பட்ட தமிழ் நாளேட்டில், நாட்டு மக்களுக்குப் பிரதமர் நேரு விடுத்த வரலாற்றுப் புகழ்மிக்க உரை பதிவானதை மிகுந்த ஆர்வத்தோடு படித்தார் அப்துல் கலாம். அந்தச் செய்திக்கு அருகிலேயே இன்னொரு செய்தியும் இருந்தது. நவகாளியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக மகாத்மா காந்தி வெறும் காலுடன் நடந்து போய்க் கொண்டிருந்த படத்துடன் விவரித்திருந்த அந்தச் செய்தி அப்துல் கலாம் அவர்களை மிகவும் நெகிழ வைத்துவிட் டது. தேசத்தந்தை என்ற நிலையில் செங் கோட்டையில் முதன்முதலில் தேசியக்கொடியை ஏற்ற வேண்டிய மனிதர், அதை விட்டு விட்டுப் பொதுச் சேவையில் தன்னை அந்தக் கணத்தில் ஈடுபடுத்திக் கொண்டது பாடசாலை மாணவர் அப்துல் கலாம் மனதில் பசுமரத்தாணியாகப் பதிந்ததாக அவரே ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். தன்னலமில்லா ஒரு அறிவியலாளராகவும், தலைவராக வும் அவர் உருவானதற்கான விதை அன்று விதைக்கப்பட்டது என்று கூட அதைச் சொல்லலாம்.

இப்படி, இளமைக் காலத்தில், இளையோர் மனதில் விதைக்கப்பட்ட கனவுகள், அவர்கள் சிந்தித்த சிந்தனைகள், உழைத்த உழைப்புகள் எல்லாம் சேர்ந்துதான், பெரிய மாற்றங்களை உருவாக்கி இருக்கின்றன.

ஆதாரம் :
**வத்திக்கான் வானொலி**



# எங்கள் தமிழ்த்தாய்

எங்கள் தமிழ்த்தாய்
இருகை குவிப்போம்
மங்களங்கள் பாடி
மலர் தூவி மகிழ்வோம்
பொங்குமவள் எழில்
பொன்னதுவும் தோற்கும்
திங்கள் அது தானும்
திகைத்துப் போய் நிற்கும்

எட்டுத் தொகையோடு
இனிய பத்துப்பாட்டு
கட்டியது காப்போம்
கண்ணது நமக்கு
விட்டு நாம் கொடுக்கோம்
விண்ணது தானும்
தொட்டடி பணியும்
தொல் தமிழ்த் தாயை!

முந்து தமிழ் மக்கள்
மூவேந்தர் ஆட்சியில்
செந்தமிழ்த் தாயின்
திருப்புகழ் இசைப்பார்
அந்த நற்பணியை
ஆற்றுவோம் நாமே
சிந்தையெலாம் அவள்
தேனாக இனிப்பாள்

செம்மொழித் தாயைச்
சீரோடு காப்போம்
அம்மொழிக் கிணையாய்
அகிலமது தன்னில்
எம்மொழி உண்டு
எதுவுமே இல்லை!
நம்மொழி தமிழே
நானில மொழியாம்!

வாகரைவாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தொழிலாளர் தினம்

தொழிலாளர் தினம் உழைக்கும் வர்க்கத்தை நினைவுகூரும் தினமாகவும், கௌரவப்படுத்தும் தினமாகவும் காணப்படுகின்றது. தொழிலாளர் தினமானது தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் துஷ்பிரயோகங்கள், அநீ–திகளுக்கு எதிராக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் இணைந்து நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தை அடுத்து ஆரம்பமானது. 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கின. அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில் கட்டிடத் தொழிலாளர்கள் 1856ல் முதன் முதலாக 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர். 1896 ஏப்ரலில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தார். தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது எனலாம். தொழிலாளரை நினைவுகூரும் தினமாக மே 1ம் திகதி பார்க்கப் பட்டாலும் சில நாடுகளில் அரசியல்வாதிகள் தமது பெயரை நிலைநாட்டிக்கொள்வதற்காக பயன்படுத்தும் ஒரு மேடையாகவே மாறி வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். ஏனைய நாட்களில் கவனிக்கப்படாத விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் போன்றோரை மே தினத்தில் மாத்திரம் அழைத்து உணவு, குடிநீர் வழங்கி கவனிக்கும் அரசியல்வா–திகள் ஏனைய நாட்களிலும் அத்தொழிலாளர்களைக் கவனத்தில் கொள்வதில்லை என்பது வருத்தத்திற்குரியதே. எவ்வாறிருப்பினும் தொழிலாளர் தினத்தின் மூலம் உலகில் வாழும் அனைத்து தொழிலாளர்களும் சுபீட்சத்துடன் வாழவேண்டுமென்பதே அனைவரினதும் விருப்பமாகும்.

**நன்றி: இணையம்**

"காலத்தின் கோலம் .... எல்லாம் மாறிப்போச்சு...." என்று சொன்னார் அன்ரனின் அலுவலக நண்பன் தணிகாசலம்.

"ஏன் இப்பிடிச் சொல்றீங்க?" என்று கேட்டார் அன்ரன்.

"மே தினம் எதுக்கு கொண்டாடிறது....? எங்கட தொழிலாளர் வர்க்கத்தினருக்குத்தானே....?" என்றார் தணிகாசலம்.

"ஓம் அதுக்கென்ன இப்ப....?" என்று அன்ரன் சொன்னார்.

"வேல செய்யிறவன்கள் ரெத்தம் சிந்தித்தான் விடுதலை வாங்கித் தந்தவன்கள்.... அதுல நம்மட அரசியல்வாதிகள் குளிர் காயிறாங்க..... முந்தி தொழிற் சங்கங்களாகத்தான் மே தினக் கூட்டம் ..... மே தின ஊர்வலம்..... எல்லாம் நடக்கும்..... இப்ப என்னென்டால் கட்சி, கட்சியாய்த்தான் மே தினம் பிரிஞ்சு கிடக்குது...." என்று பொரிஞ்சு தள்ளினார் தணிகாசலம்"

"அதான்டாப்பா .... இப்ப மே தினம் நடத்திறது தொழிலாளர் வர்க்கம் இல்ல... முதலாளி வர்க்கம்தான்..... எல்லாம் தலைகீழாகக் கிடக்கிடாப்பா....." என்றார் இஸ்மாயில்.

"திரும்பவும் தொழிலாளிகள அடக்கிப் போட்டாங்க இந்த முதலாளிங்க... கடைசியில திகதியையும் மாத்திப் போட்டாங்க....." என்று தணிகாசலம் சொன்னார்.

"என்ட யேசுவே.... திரும்பவும் ரெத்தம் சிந்த வேண்டி வருமோ.... நம்மட தொழிலாளர் வர்க்கம்...." என்று கவலையுடன் சொன்னார் அன்ரன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்

## சீயென்னா பேர்னர்டீன் – மே 20ந் திகதி



இவர் 1380ம் வருடம் புரட்டாதித் திங்கள் எட்டாம் நாளிலே இத்தாலியில் பிறந்தார். இவரின் தந்தை சீயென்னா நகர ஆளுநராக இருந்தார். பெர்னர்டீனுக்கு ஆறு வயதானபோது பெற்றோரை இழந்தார். அதுமுதல் உறவினர் ஒருவரிடம் வளர்ந்தார். திருச்சட்டம் மற்றும் அந்நாட்டுச் சட்டம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். இருபது வயதானபோது சீயென்னா நகர் முழுவதும் 'பிளேக்' தொற்றுநோய் பரவிற்று. இந்நொயால் பாதிக்கப்பட்டோருக்குப் பணிபுரிய தன்னையே அர்ப்பணித்தார். தம்முடன் சில இளைஞர்களையும் சேர்த்துக் கொண்டு மருத்துவமனையில் ஏறக்குறைய நான்கு மாதங்கள் தங்கியிருந்தார். இதன்பின் நோயுற்று பல மாதங்கள் அவதியுற்றார். தன்னை வளர்த்தவர் சுகவீனமுற்றதையடுத்து அவருடன் இருந்து பார்த்துக்கொண்டார். அவர் மரணித்தபின் நோன்பு இருந்து அவருடன் இருந்து பார்த்துக்கொண்டார். அவர் மரணித்தபின் நோன்பு இருந்து செபித்தார். கடவுளின் திருவுளம் என்ன என்பதைத் தேடினார். 22வது வயதிலே 1402ம் வருடம் புரட்டாதித் திங்கள் 8ந் திகதி பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து மறுவருடம் வார்த்தைப்பாடு கொடுத்தார். மறுவருடம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 12 வருடங்களாகத் தனிமையில் செப வாழ்வில் தன்னை ஒழுங்குபடுத்தினார். போதிக்க அனுப்பப்பட்டார். ஊர் ஊராகச் சென்று நற்செய்தியைப் போதித்தார். கிரேக்க மொழியில் இயேசு கிறிஸ்து எனப் பொருள்படும் 'IHS' எனும் வார்த்தையை எங்கும் பரப்பினார். இவரை எதிர்த்தவர்களால் பல இன்னல்களையடைந்தார். எனினும், இவரது புனித வாழ்வுக்கு முன் அவை தூசுகளாயின. பிரான்சிஸ்கன் சபையைச் சீர்திருத்தினார். 1444ம் வருடம் வைகாசித் திங்கள் 20ந் திகதியன்று மரித்த பெர்னர்டீன் 1450ம் வருடம் வைகாசித் திங்கள் 24ந் திகதி திருத்தந்தை 5ம் நிக்கலசினால் புனிதராக உயர்த்தப்பட்டார்.

– மற்றில்டா இராஜேந்திரம் –



**மேலதிகாரி உன்னைச்**
**சினந்து கொண்டால்,**
**வேலையை விட்டுவிடாதே.**
**நீ அடக்கமாயிருந்தால், பெருங் குற்றமும்**
**மன்னிக்கப்படலாம்.**
(சபை உரையாளர் 10: 4)

## மே மாதம் மேரி மாதம் ......

ஏராளமான கொடைகளை மகன் மூலம் பெற்றுத் தந்தவர். அற்புதங்களை அறிய வைத்தவர். புதுமைகளைப் புலன்களுக்குக் காட்டியவர். மே 13, 1917இல் பாத்திமா, போர்த்துக்கலில் லூசியா, பிரான்சிஸ்கோ மற்றும் ஜெசிந்தா ஆகிய மூன்று சிறார்களுக்குத் தோன்றி "ஜெபமாலையின் அன்னை" எனத் தம்மை அறிமுகப்படுத்தி, ஜெபமாலை ஜெபிக்கு மாறும், பாவிகளின் மனமாற்றத்திற்கு தவ முயற்சிகள் மேற்கொள்ளுமாறும் அன்னை வலியுறுத்துவதைக் காண்கிறோம். பிறர்மேல் அவளுக்கிருந்த அக்கறையை இது வெளிப் படுத்துகின்றது.

எனவே, இந்த சமூக அக்கறை ஆண்டிலே வணக்க மாதத்தில் ஆலயத்திற்கு சென்று பக்தியோடு செபம் செய்வோம். தினமும் செபமாலை சொல்வோம். பாவத்திற்காய் பரிகாரம் புரிவோம். "மாதாவே சரணம்" என்று அவர் காலடியை வணங்குவோம். வேண் டும் வரங்களை தாய் மரியாவின் மூலமாக இயேசுவிடம் பெறுவோம்.

"தாயில்லாமல் நானில்லை!
தானே எவரும் பிறந்ததில்லை!
எனக்கொரு தாய் இருக்கின்றாள்!
அவள் என்றும் என்னைக் காத்திடுவாள்"




பொண்டாட்டி எடுத்துரைத்தாள் பாங்காய்
போய்வாங்கி வாருமொரு தேங்காய்
திண்டாடி நான் தேடித்
தெருவிலதைக் கண்டு விலை?
விண்டுரைத்தான், எவருமதைத் தாங்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**சுருக்கமான விடை தருக :**

01. இரத்தப்போக்குடைய பெண்ணைப் பார்த்து இயேசு கூறியது யாது?
   - மகளே துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று.

02. இயேசு திருமுழுக்குப் பெறும் வேளையில் வானத்திலிருந்து ஒலித்த குரல்ஒலி யாது?
   - என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.

03. நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும் என்று அலகை கூறியதற்கு இயேசு கூறிய பதில் யாது?
   - மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை.

04. துறவற வாழ்வு என்பது என்ன?
   - ஓர் இறை அழைத்தலும், விசேட கொடையுமாகும்.

05. ஒரு துறவி வார்த்தையால் மட்டுமன்றி ............................?
   - நற்செய்தியை வெளிப்படுத்தும் ஒருவராக இருக்க வேண்டும்.

06. துறவற வார்த்தைப்பாடுகள் எவை?
   - கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு.

07. துறவறச் சபைகளின் இரு பிரிவுகளும் எவை?
   - குருத்துவம் சார்ந்த துறவிகள். - குருத்துவம் சாராத துறவிகள்.

08. குருத்துவம் சாராத துறவிகள் என்பவர்கள் யார்?
   - அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள்.

09. திருச்சிலுவைக் கன்னியர் சபையின் பணிகள் எவை?
   - மருத்துவப் பணி - சமூகப் பணி - மறைக்கல்விப் பணி
   - கல்விப் பணி - பங்குப்பணி

10. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகளில் ஒன்று "கட்டவிழாமை". கட்டவிழாமை என்பது:
   - விவாகரத்துச் செய்யமுடியாது என்பதாகும்.

11. நல்ல நிலத்தில் விழுந்த விதைகளின் பயன்கள் எவை?
   - சில 100 மடங்கும் - சில 60 மடங்கும்
   - சில 30 மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.

12. திருமுழுக்கு யோவானின் பிறப்பின் 8ம் நாள் நிறைவேற்றப்பட்ட இரு சடங்குகளும் எவை?
   - விருத்தசேதனம், குழந்தைக்குப் பெயரிடுதல்.

13. திருமுழுக்கு யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இறை பணி என்ன?
   - மெசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்தல்.

14. அன்று திருமுழுக்கு யோவான் முன் வைத்த புதிய சமூகக் கோட்பாட்டில் அடங்கியுள்ள சிந்தனைகள் எவை?
   - நீதி, சமத்துவம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு, இரக்கம்.

15. ஆண்டவர் இயேசு 72 பேரையும் மறைத்தூதுப் பணிக்கு அனுப்பும்போது எவற்றை எடுத்துச் செல்ல வேண்டாம் என அறிவுரை கூறினார்?
   - பணப்பையோ, வேறு பையோ, மிதியடிகளோ எடுத்துச்செல்லவேண்டாம் எனக் கூறினார்

16. இறையாட்சியின் மதிப்பீடுகள் பற்றிக் கூறும் உவமைகள் எவை?
   - விதைப்பவன் உவமை. - வயலில் தோன்றிய களைகள் உவமை.
   - கடுகு விதை, புளிப்பு மாவு உவமை. - புதையல், வலை, முத்து உவமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. இப்போது நான் உங்கள் முன் நிற்கின்றேன். ஆண்டவர் முன்பும் அவர் திருப்பொழிவு செய்தவர் முன்பும் என்மீது குற்றம் சாட்ட முடியுமா? யாருடைய ...................... நான் எடுத்துக் கொண்டேனா? கழுதையையாவது எடுத்துக்கொண்டேனா?

   அ) மாட்டையாவது ஆ) ஆட்டையாவது இ) செம்மறியையாவது

2. "யாரையாவது நான் ஏமாற்றினேனா? யாரையாவது நான் ...................... ? யாரிடமிருந்தாவது கையூட்டுப்பெற்று நான் அநீதியைக் கண்டுகொள்ளாமல் இருந்தேனா? சொல்லுங்கள். நான் திருப்பித் தந்து விடுகிறேன்" என்று கூறினார்.

   அ) அடித்தேனா ஆ) வஞ்சித்தேனா இ) ஒடுக்கினேனா

3. அதற்கு அவர்கள், "நீர் எங்களை ஏமாற்றவில்லை. ஒடுக்கவில்லை. கையூட்டு பெறவில்லை" என்றனர். அவர் அவர்களிடம் "நீங்கள் என்னிடம் ...................... காணவில்லை என்பதற்கு இன்று ஆண்டவர் சாட்சி, அவர் திருப்பொழிவு செய்தவரும் சாட்சி" என்றபோது அவர்கள் "அவரே சாட்சி!" என்றனர்.

   அ) எப்பாவமும் ஆ) எக்குற்றமும் இ) எப்பிழையும்

4. மீண்டும் சாமுவேல் மக்களிடம் "ஆண்டவர் தாம் மோசேயையும், ...................... நியமித்து, உங்கள் மூதாதையரை எகிப்து நாட்டினின்று கொண்டுவந்தார். ஆண்டவர் முன் நில்லுங்கள், உங்களுக்கும், மூதாதையருக்கும் ஆண்டவர் செய்தவற்றை வைத்து உங்களோடு வழக்காடுவேன்" என்றார்.

   அ) ஆரோனையும் ஆ) யோசுவாவையும் இ)யோசேப்பையும்

5. மீண்டும் அவர் "யாக்கோபு எகிப்துக்குச் சென்றபின், உங்கள் மூதாதையர் கூக்குரலிட்டபோது, மோசேயையும், ஆரோனையும் அனுப்பினார். அவர்கள் உங்கள் மூதாதையரை ...................... கொண்டு வந்து இங்கு குடியேறச் செய்தனர்.

   அ) பலஸ்தீனாவிலிருந்து ஆ) எகிப்திலிருந்து இ) இஸ்ரயேலிலிருந்து

6. உங்கள் மூதாதையர் தம் கடவுளை மறந்தபோது, அவர் அவர்களை ...................... கையிலும், பெலிஸ்தியரின் கையிலும், மோவாபு அரசர் கையிலும் விட்டு விட்டார். இவர்கள் அவர்களோடு போரிட்டனர்.

   அ) ஆசோரின் ஆ) எகிப்தியரின் இ) சீசராவின்

7. அவர்கள் கூக்குரலிட்டு 'நாம் ...................... புறக்கணித்தோம், பாகால்களையும், அஸ்தரோதுகளையும் வழிபட்டுப் பாவம் செய்துள்ளோம். இப்போது எங்களை விடுவியும். உம்மையே வழிபடுவோம்' என்றனர்.

   அ) யாவேயை ஆ) ஆண்டவரை இ) கடவுளை

8. ஆண்டவர் எருபாகால், பேதான், இப்தாகு, சாமுவேல் ஆகியோரை அனுப்பி, சுற்றிலுமிருந்த எதிரிகளிடமிருந்து உங்களை விடுவித்தார். ...................... நீங்களும் வாழ்ந்தீர்கள். நாகாசு உங்களை எதிர்த்தபோது "ஓர் அரசர் வேண்டும்!" என்றீர்கள்.

   அ) பயமின்றி ஆ) நிம்மதியாக இ) அச்சமின்றி

9. இதோ, நீங்கள் தேர்ந்துகொண்ட அரசர்! ஆண்டவர் தந்துள்ளார். நீங்கள் ஆண்டவருக்கு அஞ்சி, பணிந்து, அவர் குரலுக்குச் செவி கொடுத்து அவர் கட்டளைக்கு எதிராக ...................... விளைக்காவிடில் ஆண்டவரைப் பின்பற்றுபவர் ஆவீர்கள்.

   அ) கலகம் ஆ) குழப்பம் இ) சண்டை

10. ஆனால், நீங்கள் அப்படிச் செய்யாவிடில் ஆண்டவரின் கை உங்கள் மூதாதையருக்கு ...................... இருந்தது போல், உங்களுக்கும் எதிராக இருக்கும். இப்பொழுது ஆண்டவர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யவிருக்கும் மாபெரும் நிகழ்ச்சியைப் பாருங்கள்.


   அ) எதிராக ஆ) உதவியாக இ) சார்பாக

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்படவேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 179



**பரிசுப் போட்டி**

(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**31.05.2018**

1. புத்தர் பெருமானின் பற்கோயில் இலங்கையில் உள்ள இடம்:
   (யாழ்ப்பாணம் - அனுராதபுரம் - கண்டி)

2. கிரீஸ் நாட்டுப் புழக்கத்திலுள்ள பணத்தின் பெயர்:
   (டொலர் - டிராச்மா - டிராம்)

3. எப்பேர்ப்பட்ட கொடிய விஷத்தையும் போக்கக்கூடியது:
   (வசம்பு - உப்பு - தேன்)

4. தூய யோசேப் வாஸ் விண்ணுலகு சேர்ந்த தினம்:
   (1716.01.11 - 1711.01.16 - 1711.01.15)

5. ' அஞ்சிலே அறியாதவன் ஐம்பதிலே ..........................?'
   (அறிவானா - கேட்பானா - கற்பானா)

6. "ப்" எனும் இடைநிலையை ஏற்கும் இடைவினை:
   (எழும்புவான் - கேட்போம் - நடப்பான்)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 179
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் : 177,
பங்கு பற்றியோர் 21 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 21 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 177 விடைகள்

கழுதைகள், ஆண்டவர், குலங்கள், சவுலின், குவியலிடையே, உயரமாக, சட்டதிட்டங்களை, மீட்க, நாகாசு, வல

## அறிவை வளர்ப்போம் - 177 விடைகள்

1. சாக்கடல்
2. தன்சானியா
3. 1214
4. க்ளைக்கோ அல்கலாய்டு
5. கறி சமைப்பாள்
6. புகைவண்டி நிலையம்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்

* M. லுவிஸ்,
C/O, சாதனா,
பிரதான வீதி,
தம்பிலுவில் - 01

* அசோகலிங்களம் டிலோஜினி,
பாடசாலை வீதி,
வாகரை.

* ஜெ. மெலனி,
135, லேடி மெனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

* ம. ஜெரோமி,
142, விபுலானந்தபுரம்,
தன்னாமுனை.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 129 முடிவுகள்

**1ம் பரிசு : 400/=**

* டேமியன் தர்ஷன்,
59, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு : 300/=**

* ஷெரோணி கென்றிக்,
பறங்கியர் வீதி,
ஏறாவூர் - 04.

**3ம் பரிசு : 200/=**

* ரா. மது இமேஷா,
புனித திரேசா கன்னியர் இல்லம்,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. ழீஆ : ர்□**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media